


# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 493 பிலவ வருடம், பங்குனி மாதம் 21ஆம் திகதி திங்கட்கிழமை (04.04.2022) ஹிஜ்ரி - 1443, ரமழான் - 02 , 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.30


## பாகிஸ்தான் நாடாளுமன்றம் கலைப்பு!

02 பக்கம்





## ஊரடங்கையும் மீறி ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்கள் கொழும்பில் ஆர்ப்பாட்டம்!

02 பக்கம்

## நாடாளுமன்ற இலச்சினைகளை வாகனங்களில் அகற்றிய எம்.பிக்கள்

•யோ.தர்மராஜ்

நாட்டு மக்களிடமிருந்து வெளிப்பட்டுள்ள எதிர்ப்புகளுக்கு மத்தியில், 70இற்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது வாகனங்களின் முன்பக்கக் கண்ணாடியில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினருக்கான இலச்சினை ஸ்ரிக்கரை அகற்றியுள்ளதாக நாடாளுமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன. 02 பக்கம்

# விரைவில் வருகிறது இடைக்கால அரசு!

### புதிய அமைச்சரவை ஓரிரு தினங்களில்

•யோ.தர்மராஜ்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட அமைச்சரவையை கலைத்து இடைக்கால அரசை உருவாக்குமாறு முன்னாள் அமைச்சர் விமல் வீரவங்ச உள்ளிட்ட 11 பங்காளிக் கட்சிகள் முன்வைத்த கோரிக்கைக்கு, ஜனாதிபதி மற்றும் பிரதமர் இணக்கம் தெரிவித்துள்ளதாக ஆளுங்கட்சி முக்கியஸ்தர் ஒருவர் 'தமிழன்' நாளிதழுக்கு நேற்றிரவு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

நாட்டின் தற்போதைய நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் பங்களிப்புடன் இடைக்கால அரசாங்கமொன்றை ஸ்தாபிப்ப தற்கும் அதன் பின்னர்... 02 பக்கம்

### கமெண்ட் கந்தர்..



பழைய மொந்தையில புதிய கள்ளு எண்டு சொல்லுங்கோ...

## அமைச்சர்கள், அரச தரப்பிலுள்ள எம்.பிக்களின் வீடுகள் முற்றுகை

### மக்களின் எதிர்ப்பு வலுக்கிறது

•யோ.தர்மராஜ்

அரசாங்கத்தின் தவறான முடிவுகளால் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ள மக்கள் அரசுக்கு எதிராக போராட்டங்களை முன்னெடுத்துவரும் அதேவேளை, ஆளுந்தரப்பு அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களின் வீடுகளையும் முற்றுகை யிடுகின்றனர்.

அதன்படி, அமைச்சர் பந்துல குணவர்தன, இராஜாங்க அமைச்சர் பியால் நிஷாந்த மற்றும் இந்திக்க அனுருத்த ஆகியோரின் வீடுகளை சுற்றி முற்றுகையிட்டனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமான... 02 பக்கம்

## ஊரடங்கையும் மீறி மக்கள் போராட்டம்



படப்பிடிப்பு ஏஷான் தஸநாயக்க

02 பக்கம்

## அமைச்சர் நாமலின் குடும்ப உறுப்பினர்கள் நாட்டிலிருந்து வெளியேற்றம்

02 பக்கம்

## ஜனாதிபதி வீட்டின் முன் ஒருவர் உயிர்மாய்ப்பு



02 பக்கம்

## முன்னறிவித்தலின்றி சமூக ஊடகங்களை முடக்கியது அரசு

### 15 மணித்தியாலங்களுக்குப் பின் நீக்கம்

•யோ.தர்மராஜ்

அரசாங்கத்தினால் எவ்வித முன்னறிவிப்புகளுமின்றி பேஸ்புக், வட்ஸ்அப் மற்றும் ட்விட்டர் உள்ளிட்ட சமூக வலைத்தளங்கள் முற்றாக முடக்கப்பட்டன. 02 பக்கம்

### உஷ்



அமைச்சரவை மாறப்போகிறதென்ற தகவல் வந்த கையுடன் பிரதமர் பதவிக்கு பலர் அடிபட்டதாக தகவல். அதேசமயம், அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர்கள் பலர் இராஜினாமா செய்ய மனமின்றி இருந்தார்களாம். இதனையடுத்து, அரசாங்கத்தின் உயர்மட்ட அதிகாரிகள் பலர் வெளிநாடு செல்லத் தயாராகி வருவதாக தகவல்.




# ஊரடங்கையும் மீறி வீதிக்கிறங்கிய மக்கள்

## விரைவில் வருகிறது...

விரைவில் பொதுத் தேர்தலை நடத்துவதற்கும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் 11 பங்காளிக் கட்சிகளும் இணைந்து ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு யோசனை ஒன்றை முன்வைத்துள்ளோம்.

முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவங்ச, உதய கம்மன்பில, அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மற்றும் நானும் நேற்றுமுன்தினம் ஜனாதிபதியை சந்தித்து இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளதுடன், நேற்று (03) பிரதமரையும் சந்தித்து அதேயோசனையை முன்வைத்தோம். அதற்கு பதிலளித்த, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நீங்கள் முன்வைத்திருப்பது நல்லதொரு யோசனை எனக்கூறினார் எனவும் தெரிவித்தார்.

இதற்கமைய, இன்று (04) ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் புதிய அமைச்சரவையுடன் இடைக்கால அரசாங்கம் அமைப்பதற்கும் வாய்ப்புள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, நேற்றிரவு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகியதாக கூறப்பட்டபோதிலும் பிரதமர் அலுவலகம் அதனை மறுத்திருந்தது.

குறிப்பாக நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ, அமைச்சர்களான சமல் ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ மற்றும் இராஜாங்க அமைச்சர் சஷிந்திர ராஜபக்ஷ ஆகியோர் தங்களுடைய பதவிகளை இராஜினாமா செய்ய தயாராகிய நிலையிலேயே பிரதமர் மஹிந்த தமது பதவியை இராஜினாமா செய்யாதிருக்க தீர்மானித்துள்ளார்.

## நாடாளுமன்ற...

அதன்படி, தாங்கள் தங்களுடைய உறுப்பினருக்கான இலச்சினையை அகற்றியுள்ளதாக சில நாடாளு மன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எரிபொருள், எரிவாயு மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்காக வரிசையில் காத்திருக்கும் மக்களால் ஏதேனும் அச்சுறுத்தல் ஏற்படலாம் என்பதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, எரிபொருள், எரிவாயு அல்லது வரிசைகள் மற்றும் ஏனையப் பகுதிகள் அல்லது இடங்களுக்குச் செல்வதை முடிந்தவரை தவிர்க்குமாறு அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்புத் தரப்பினர் அறிவுறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாடாளுமன்ற ஊழியர்களை ஏற்றிச் செல்லும் இலங்கை போக்குவரத்து சபை பஸ்களின் முன்பக்க கண்ணாடியில் நாடாளுமன்றம் என வைக்கப்பட்டிருந்த பெயர்ப் பலகைகளை அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## அமைச்சர்கள், அரச தரப்பிலுள்ள...

இந்திக்க அனுருத்தவிற்கு எதிராக நேற்று (03) போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டதுடன், பொது மக்களால் அவருடைய வீடும் முற்றுகையிடப்பட்டது.

அதேபோன்று, இராஜாங்க அமைச்சர் பியால் நிஷாந்தவின் வீட்டின் முன்பாக நேற்று (03) பொது மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியதுடன், வீட்டையும் முற்றுகையிட்டனர்.

இதேவேளை, பொது மக்களால் நேற்றுமுன்தினம் (02) இரவு அமைச்சர் பந்துல குணவர்தனவின் வீடும் முற்றுகையிடப்பட்டு போராட்டம் நடத்தப்பட்டது. எனவே, நாளுக்கு நாள் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்கள் அதிகரிக்கும் நிலை யில், அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு எதிரான போராட்டங்களும் வலுக்கின்றன. இதனால், அவர்களுடைய வீடுகளும் முற்றுகையிடப்பட்டு போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி வீட்டின் முன்...

மிரிஹானவில் உள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வீட்டிற்கு முன்பாக 53 வயதுடைய ஆண் ஒருவர் நேற்று தற்கொலை செய்து கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மின்வெட்டை உடனடியாக நிறுத்தக்கோரி, அந்த நபர் மின்மாற்றியில் ஏறியதாகவும் பின்னர் கீழே விழுந்ததாகவும் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவத்தின்போது அவர் போதையில் இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

## அமைச்சர் நாமலின்...

அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் மத்தியில் எழுந்துள்ள எதிர்ப்புக்கு மத்தியில், அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் மனைவி லிமினி ராஜபக்ஷ மற்றும் அவரது பெற்றோர்கள் நேற்றுக் காலை நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

லிமினி ராஜபக்ஷவும் அவரது பெற்றோரும் இலங்கைக்கு வெளியில், தெரியாத இடமொன்றிற்குச் சென்றதாக ஆதாரங்கள் உறுதி செய்தன.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் மற்ற இரு மருமகள்களும் நாட்டை விட்டு வெளியேறிவிட்டார்களா என்பது தெரியவில்லை எனவும் அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

## பாகிஸ்தான் நாடாளுமன்றம்...

பிரதமர் இம்ரான் கானின் கோரிக்கையை ஏற்று பாகிஸ்தான் ஜனாதிபதி ஆரிஃப் ஆல்வி நாடாளுமன்றத்தைக் கலைத்துள்ளார்.

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானுக்கு எதிராக எதிர்க்கட்சியினர் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தனர். பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

ஆனால், நாடாளுமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பு ஒத்திவைக்கப்படுவதாக சபாநாயகர் அறிவித்தார்.

இதைத் தொடர்ந்து, பிரதமர் இம்ரான் கான் உரையாற்றுகையில், நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தல் நடத்திட வேண்டும் என ஜனாதிபதியிடம் கோரிக்கை வைத்தார்.

இதை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் முறையிட எதிர்க்கட்சிகள் திட்டமிட்டு வந்தன.

இந்த நிலையில், பிரதமர் இம்ரான் கான் கோரிக்கையை ஏற்று ஜனாதிபதி ஆரிஃப் ஆல்வி, நாடாளுமன்றத்தைக் கலைத்து உத்தரவிட்டுள்ளார். மேலும் 90 நாட்களுக்குள் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

## முன்னறிவித்தலின்றி...

அதன்படி, நேற்றுமுன்தினம் (02) நள்ளிரவு முதல் நேற்று (03) வரை இவ்வாறு சமூக வலைத் தளங்கள் முடக்கப்பட்டிருந்தன. இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். ஊடகத்துறையும் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது. அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் அதிகரித்துள்ள நிலையில், நேற்று (03) நாடளாவிய ரீதியில் ஊரடங்கு சட்டம் அமுல்படுத் தப்பட்டது. இதனால் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் போராட்டங்களை முன்னெடுப்பதற்கு முடியாத நிலைமை ஏற்பட்டது.

இந்த நிலையில், அரசாங்கத்தினால் எவ்வித அறிவிப்புகளும் விடுக்கப்படாது நேற்று முன்தினம் (02) நள்ளிரவு முதல் பேஸ்புக், வட்ஸ்அப், ட்விட்டர், யூடியூப் போன்ற அனைத்து சமூக வலைத்தளங்களும் முடக்கப்பட்டன.

எனினும், பாதுகாப்பு அமைச்சின் கோரிக்கைக்கு அமையவே சமூக வலைத்தளங்கள் முடக்கப்பட்டதாக தொலைத்தொடர்பு ஆணைக்குழு அறிவித்திருந்தது.

குறிப்பாக, சமூக வலைத்தளங்களின் ஊடாக நேரடி ஒளிபரப்பு மற்றும் மக்களை தூண்டும் வகையில் பதிவுகள் இடுவதால் ஆங்காங்கே போராட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் அதிகரிக்கும் என்பதாலேயே இவ்வாறு சமூக வலைத்தளங்கள் முடக்கப்பட்டுள்ளதாக சமூக வலைத்தள செயற்பாட்டாளர்கள் தெரிவித்துள் ளனர்.

மேலும், விபிஎன் செயலிகள் மூலம் சமூக வலைத்தளத்தைப் பயன்படுத்த ஆரம்பித்துள்ளதாகவும் இணைய பாவனையாளர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, மின்வெட்டு குறித்து நுகர்வோருக்கு தகவல் தெரிவிப்பது கடினமாக இருப்பதால், சமூக ஊடகங்களை உடனடியாக வழமைக்கு கொண்டுவர வேண்டும் என்று பொதுப் பயன்பாட்டு ஆணையம் கோரிக்கை விடுத்திருந்தது.

அதனடிப்படையில், தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு மற்றும் அனைத்து கையடக்கத் தொலைபேசி வசதிகள் வழங்குனர்களிடமும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இந்தக் கோரிக்கையை விடுத்திருந்தது.

இந்த கோரிக்கைக்கமைய நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் பேஸ்புக், வட்ஸ்ஆப், ட்விட்டர் உள்ளிட்ட அனைத்து சமூகவலைத்தளங்களின் மீதான தடைகள் நீக்கப்பட்டு வழமைக்கு திரும்பின.

## ஊரடங்கையும் மீறி...

**யோ.தர்மராஜ்**

ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும், அதனை மீறி ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர்களினால் கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

கொழும்பு எதிர்க்கட்சித் தலைமையகத்தில் நேற்று (03) காலை ஆரம்பிக்கப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணி சுதந்திர சதுக்கத்தை நோக்கிச் சென்றபோது, பொலிஸார் மற்றும் பொலிஸ் அதிரடிப் படையினரால் இடைநடுவே தடுத்து நிறுத்தப்பட்டது.

மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள், பொருட்களுக்கு தட்டுப்பாடு மற்றும் பொருத்தமற்ற தீர்மானங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று (03) நாடளாவிய ரீதியில் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவிருந்தன.

இந்தநிலையில், ஜனாதிபதியினால் நாட்டில் அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டதுடன், நேற்று முன்தினம் (02) மாலை 6 மணி முதல் இன்று (04) காலை 6 மணி வரை நாடளாவிய ரீதியில் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டதால் போராட்டங்களை முன்னெடுக்க முடியாது போனது.

எனினும், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்று கூடி கொழும்பில் போராட்டம் ஒன்றை முன்னெடுக்க தீர்மானித்திருந்தனர். அதன்படி, நேற்று (03) காலை எதிர்க்கட்சி அலுவலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தை ஆரம்பித்து சுதந்திர சதுக்கம் வரை பேரணியாக சென்றனர். இந்த நிலையில், சுதந்திர சதுக்கத்திற்கு முன்பாகவுள்ள சுற்றுவட்டத்தில் வைத்து பொலிஸார் மற்றும் பொலிஸ் அதிரடிப் படையினரால் ஆர்ப்பாட்டக்காரர்கள் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

இதனால், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் உள்ளிட்ட எதிர்க்கட்சியினர் அவ்விடத்திலேயே தங்களுடைய எதிர்ப்பை தெரிவித்ததுடன், தங்களை சுதந்திர சதுக்கத்திற்குள் அனுமதிக்குமாறு வலியுறுத்தினர்.

எனினும், தற்போது நாட்டில் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. உங்களை அங்கே அனுமதிக்க முடியாது என பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸார் இவ்வாறு தெரிவித்தபோதிலும், ஆர்ப்பாட்டக்காரர்கள் அவ்விடத்திலேயே நின்று 'கோட்டா கோ ஹோம்' என கோஷம் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.













மஹரகமவில்... (படப்பிடிப்பு கிஷான் காரியவசம்)












கொழும்பில்... (படப்பிடிப்பு ஏஷான் தஸநாயக்க)

## ஊரடங்கையும் மீறி மக்கள்...

**யோ.தர்மராஜ்**

ஊரடங்கு சட்டம் மற்றும் அவசரகால நிலைமை பிரகடனத்தையும் மீறி நாட்டின் பல பகுதிகளில் அரசுக்கு எதிரான போராட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

நாளுக்கு நாள் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் வலுக்கின்ற நிலையில், நேற்று (03) நாடளாவிய ரீதியில் பாரிய ஆர்ப்பாட்டங்களும் போராட்டங்களும் முன்னெடுக்கவிருந்தன. எனினும், அரசாங்கத்தினால் ஊரடங்கு சட்டம் மற்றும் அவசரகால நிலைமை பிரகடனப்படுத் தப்பட்டிருந்தது.

எனினும், ஊரடங்கு சட்டம் மற்றும் அவசர கால நிலைமை பிரகடனத்தையும் மீறி கொழும்பு, காலி, பேராதனை, மஹரகம, ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகம் போன்ற பல இடங்களில் ஆர்ப்பாட்டங்களும் எதிர்ப்பு போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இதேவேளை, இலங்கைக்கு எதிராக நியூசிலாந்து, கனடா, அவுஸ்திரேலியா போன்ற சர்வதேச நாடுகளிலும் நேற்று (03) போராட்டங்களும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக இனந்தெரியாத குழுவொன்றினால் நேற்று (03) ஏற்பாடு செய்திருந்த போராட்டத்திற்கு மக்கள் மத்தியில் பெரும் ஆதரவு கிடைத்திருந்தது.

பொருட்களின் விலை அதிகரிப்பு, எரிபொருள், எரிவாயு, பால்மா உள்ளிட்டவற்றுக்கு மக்கள் வரிசைகளில் நிற்பதுடன், நாளுக்கு நாள் மின்வெட்டு நேரமும் அதிகரித்துள்ளதால் அரசாங்கத்தின் மீது அதிருப்தியடைந்துள்ள மக்களுக்கு ஆதரவாக இனந்தெரியாத குழுவொன்றினால் இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்தது மற்றும் வீதியில் இறங்கி போராடுவதற்கு மக்களுக்கு அழைப்பு விடுத்திருந்தது.

இது யாரால் ஏற்பாடு செய்யப்பட்டது என்பது குறித்து எவ்வித தகவல்களும் இல்லாத நிலையிலும், அரசுக்கு எதிரான போராட்டம் என்பதால் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பும் ஆதரவும் கிடைத்திருந்தன.

இந்நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வீடு அமைந்துள்ள மிரிஹான பகுதியில் இடம்பெற்ற போராட்டம் கலவரமாக மாறி, சொத்துகளுக்கும் மனிதர்களுக்கும் பாரிய தேசத்தை ஏற்படுத்தி ருந்தன.

இதனால், நேற்று (03) இடம்பெறவிருந்த போராட்டத்தாலும் ஏதேனும் பாதிப்புகள் ஏற்படும் என்ற அச்சத்தினால் நேற்றுமுன்தினம் (02) காலை ஜனாதிபதியினால் அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டதுடன், அன்று மாலை 6 மணி முதல் இன்று (04) அதிகாலை 6 மணிவரை நாடளாவிய ரீதியில் ஊரடங்கு சட்டமும் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

இதனால், நேற்று (03) நாடளாவிய ரீதியில் திட்டமிட்டிருந்த போராட்டங்கள் கைவிட்டிருந்த போதிலும், ஊரடங்கு சட்டம் மற்றும் அவசர கால நிலைமை பிரகடனத்தையும் மீறி ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களால் கொழும்பிலும், பேராதனை பல்கலைக்கழக மாணவர்களால் பேராதனையிலும் பொது மக்களால் காலியிலும் ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஜே.வி.பியினரால் கொழும்பிலும் பொது மக்களால் பம்பலப்பிட்டி மற்றும் மாலபே உள்ளிட்ட பல பகுதிகளிலும் பாரிய போராட்டங்களும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன.

குறிப்பாக, பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் முன்னெடுத்த போராட்டத்தை கலைப்பதற்கு பொலிஸாரினால் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டன. அதேபோன்று, பல பகுதிகளில் பொதுமக்களும் மாணவர்களும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்திருந்தனர்.

இதேவேளை, மஹரகம பகுதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட வந்தவர்களை பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டதுடன், ஐக்கிய மக்கள் சக்தியினரார் கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தையும் பொலிஸார் தடுத்து நிறுத்தியதுடன், அவர்கள் நின்ற இடத்திலேயே போராட்டத்தையும் முன்னெடுத்திருந்தனர்.

மேலும், மாலபே பகுதியில் பொது மக்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தை கலைப்பதற்கு பொலிஸாரினால் நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகை பிரயோகமும் முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை, இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிராக கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற சர்வதேச நாடுகளிலும் நேற்று (03) பாரிய ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

# பேராதனை பல்கலையில் மாணவர் போராட்டம்

## ஊரடங்கிலும் அரசைக் கண்டித்து எதிர்ப்புக் கோஷம்

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று (03) பேராதனை பல்கலைக்கழகத்தில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்திருந்தது. இந்த ஆர்ப்பாட்டத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர பொலிஸார் குவிக்கப்பட்டிருந்ததுடன் கண்ணீர்ப் புகை பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைக்கு தீர்வைப் பெற்றுத்தரக்கோரி மாணவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

தமது கோரிக்கைகளுக்கு நியாயமான தீர்வைப் பெற்றுக்கொடுக்குமாறு அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கோரியுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தின் காரணமாக கண்டி, பேராதனை பிரதேசத்தில் நேற்று அமைதியின்மை ஏற்பட்டிருந்தது. நேற்று நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தாலும் பல்கலை மாணவர்களினால் குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# 40 ஆயிரம் தொன் அரிசி இந்தியாவிலிருந்து இலங்கைக்கு

(திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது)

இலங்கை பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில் உணவுத் தட்டுப்பாட்டை போக்க இந்தியா சார்பில் 3 இலட்சம் தொன் அரிசி அனுப்பப்படவுள்ளது. இதில் முதல் கட்டமாக 40 ஆயிரம் தொன் அரிசி அனுப்பப்படவுள்ளது.

தென்னிந்திய துறைமுகங்களில் இருந்து இலங்கைக்கு சரக்கு கப்பல்கள் மூலம் அரிசி அனுப்பும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளது. அடுத்த சில நாட்களில் சரக்கு கப்பல்கள் இலங்கையை சென்றடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியா சார்பில் சரக்கு கப்பலில் அனுப்பி வைக்கப்பட்ட 40 ஆயிரம் தொன் டீசல் நாட்டை வந்தடைந்துள்ளது.

இது குறித்து மும்பையை சேர்ந்த பட்டாபி அக்ரோ புட்ஸ் நிர்வாக இயக்குனர் கிருஷ்ணராவ் கூறியதாவது, இலங்கைக்கு இந்தியாவால் மட்டுமே உதவ முடியும். இதர நாடுகளில் இருந்து கடல் மார்க்கமாக எந்தவொரு பொருளையும் இலங்கைக்கு கொண்டு செல்ல பல வாரங்கள் தேவைப்படும்.

இந்தியாவில் இருந்து சில நாட்களில் இலங்கைக்கு நிவாரணப் பொருட்களை அனுப்ப முடியும்.

முதல் கட்டமாக இந்தியாவில் இருந்து 40 ஆயிரம் தொன் அரிசி இலங்கைக்கு அனுப்பப்படவுள்ளது.

அடுத்த சில மாதங்களில் 3 இலட்சம் தொன் அரிசி அனுப்பி வைக்கப்படும். இதன்மூலம் இலங்கையில் உணவுத் தட்டுப்பாடு குறையும். மேலும் அடுத்த சில வாரங்களில் இலங்கைக்கு தேவையான சர்க்கரை, கோதுமையும் அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிவித்தார்.

# தடைசெய்யப்பட்ட 300 கிலோ கடல் அட்டைகள் பறிமுதல்

## மெரைன் பொலிஸார் நடவடிக்கை



(மன்னார் நகர் நிருபர்)

இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தில் சட்டவிரோதமாக மறைத்துவைக்கப்பட்டிருந்த தடைசெய்யப்பட்ட 300 கிலோ கடல் அட்டைகளை மெரைன் பொலிஸார் நேற்று (03) காலை பறிமுதல் செய்துள்ளனர்.

இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகம் பகுதியில் மீனவர்களால் தடைசெய்யப்பட்ட கடல் அட்டைகள் பிடிக்கப்படுவதாக மெரைன் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

இதனையடுத்து நேற்று அதிகாலை கடற்கரையோரத்தில் இராமேஸ்வரம் மெரைன் பொலிஸார் ரோந்துப் பணியில் ஈடுபட்டனர்.

இதன்போது இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலுள்ள மீன் கம்பனி ஒன்றில் மெரைன் பொலிஸார் சோதனை செய்தபோது அங்கு சாக்குப்பைகளில் தடைசெய்யப்பட்ட உயிருள்ள கடல் அட்டைகள் மறைத்துவைத்திருந்தமை தெரியவந்தது.

இதையடுத்து மெரைன் பொலிஸார் உயிருடன் இருந்த சுமார் 300 கிலோ எடையுள்ள கடல் அட்டைகளையும் இச்சம்பவத்தில் தொடர்புடைய மூவரையும் தனுஷ்கோடி மெரைன் காவல் நிலையத்திற்கு அழைத்துச்சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

மேலும், இந்த தடைசெய்யப்பட்ட கடல் அட்டைகள் தனுஷ்கோடி கடல் வழியாக இலங்கைக்கு கடத்த பதுக்கி வைக்கப்பட்டிருந்ததா? என்ற கோணத்தில் தொடர்ந்து மெரைன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழில் ஊடகவியலாளர்களுக்கு பொலிஸாரால் அச்சுறுத்தல்



(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்களுக்கு பொலிஸாரால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட சம்பவமொன்று நேற்று (03) பதிவானது.

அரசாங்கத்திற்கு எதிராக பொதுமக்களினால் போராட்டங்கள் முன்னெடுக்கப்படலாம் என்பதால் குறித்த போராட்டங்களை தடுக்கும் முகமாக நாடு பூராகவும் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மக்கள் விடுதலை முன்னணியின் யாழ்ப்பாண மாவட்ட அலுவலகத்தில் ஊடகவியலாளர் சந்திப்பு ஏற்பாடு செய்திருந்ததன் காரணமாக நேற்றைய தினம் அங்கு ஊடகவியலாளர்கள் செய்தி சேகரிப்பதற்காக சென்றிருந்தனர்.

இந்நிலையில், ஊடகவியலாளர் சந்திப்பு நடக்கவிருந்த இடத்தைச் சுற்றி பொலிஸார் குவிக்கப்பட்டு அலுவலகத்திற்கு முன்னால் நிறுத்தப்பட்டிருந்த ஊடகவியலாளர்களின் மோட்டார் சைக்கிள்களை அலுவலகத்திற்குள்ளே நிறுத்துமாறு அச்சுறுத்தினர்.

அத்துடன் ஊடகவியலாளர்களை, வீதியில் பயணிக்க முடியாது எனவும் ஊரடங்கு வேளையில் வீதியில் பயணிக்க



அனுமதி இல்லை எனவும் தெரிவித்து தொலைபேசிகளில் ஒளிப்படங்களை எடுத்து அச்சுறுத்தியுள்ளனர்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹணவால் ஊரடங்கு வேளையில் அத்தியாவசிய தேவைகள் மற்றும் ஏனைய அன்றாடத் தேவைகளை கருதி வீதியில் பயணிப்போர் தமக்குரிய அலுவலக அடையாள அட்டையினை பயன்படுத்தி வீதிகளில் பயணிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், யாழ்ப்பாண பொலிஸார் இதனை பின்பற்றுகின்றார்களா என ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

## கந்தப்பளை சமர்ஹில் தோட்ட ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய கும்பாபிஷேகம்

(தலவாக்கலை நிருபர்)

நுவரெலியா கந்தப்பளை சமர்ஹில் தோட்ட அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய புனராவர்த்தன பஞ்சகுண்டபக்ஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் 6ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதன் ஆரம்ப வைபவம் இன்று (04) திங்கட்கிழமை காலை 9.15 மணிக்கு மஹா கணபதி ஹோமத்துடன் ஆரம்பமாகி நாளை (05) செவ்வாய்க்கிழமை காலை 9 மணிமுதல் விநாயகர் வழிபாடு, விசேட யாக பூஜை, தீபாராதனை என்பன நடைபெறும். அத்துடன், காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறும்.

நாளை மறுதினம்(06) புதன்கிழமை காலை 7 மணிமுதல் 8 மணிவரை பால்குட பவனி நடைபெற்று விநாயகர் வழிபாடு, யாகபூஜை, விசேட தீபாராதனை மற்றும் திருமுறைப் பாராயணம் என்பன நடைபெற்று காலை 9 மணிக்கு இராஜகோபுரத்திற்கு கும்பாபிஷேகம் நடைபெறும். அதனை தொடர்ந்து நண்பகல் மகேஸ்வர பூஜை நடைபெற்று பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

அன்று மாலை 5 மணிக்கு வசந்த மண்டப பூஜையினைத் தொடர்ந்து சுவாமி உள் வீதி ஊர்வலம் உற்சவம் நடைபெறும். இதனை தொடர்ந்து 48 நாட்களுக்கு மண்டலாபிஷேகம் நடைபெறும் என மஹா கும்பாபிஷேக ஏற்பாட்டுக் குழு தலைவர் எம். மகாலிங்கம் மதிவாணன் தெரிவித்தார்.

# நான்கு மாகாணங்களில் பாடசாலைகளுக்கு விடுமுறை

வடக்கு, தெற்கு, வடமேல் மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் இன்று (04) விடுமுறை வழங்கப்படுவதாக கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

ஏனைய மாகாணங்களில் உள்ள பாடசாலைகளில் தவணைப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்காக மாத்திரம் பாடசாலைகள் திறக்கப்படும் என கல்வியமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு கல்வியமைச்சின் செயலாளர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.







நாட்டில் நேற்று அமுல்படுத்தப்பட்டிருந்த ஊரடங்கு சட்டத்தினால் பிரதான நகரங்கள் விரிச்சோடின. (படங்கள்: லலித் பெரேரா)

# 250 மதுபான போத்தல்களுடன் மட்டக்களப்பில் ஒருவர் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு நகரில் சட்டவிரோதமாக ஏறாவூர் குடியிருப்பு பிரதேசத்துக்கு மதுபானங்களை பட்டா ரக வாகனத்தில் விற்பனைக்காக எடுத்துச் சென்ற ஒருவரை 250 கால் போத்தல்கள் கொண்ட மதுபானங்களுடன் நேற்று முன்தினம் சனிக்கிழமை (02) கைது செய்துள்ளதாக மட்டு. தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்ட புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து, அன்றைய தினம் மாலை 6.30 மணியளவில் மட்டக்களப்பு பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் டபிள்யூ.எம்.எஸ். சந்திரகுமார தலைமையிலான பொலிஸ் குழுவினர் நகர்ப் பகுதியான கோட்டமுனை பாலத்துக்கு அருகில் பட்டா ரக வாகனத்தில் மதுபானங்களை எடுத்துச் சென்ற வாகனத்தை சுற்றிவளைத்து மடக்கிப் பிடித்து சோதனையிட்டனர்.

இதன்போது ஒருவரை கைது செய்ததுடன் 250 கால்போத்தல் கொண்ட மதுபான போத்தல்களை மீட்டதுடன் பட்டா ரக வாகனத்தையும் கைப்பற்றியுள்ளனர். இதில் கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## மாதிபொல துப்பாக்கிச் சூட்டில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

கலேவெல, மாதிபொல பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் குடும்பஸ்தர் ஒருவர் கொலைசெய்யப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டில் காயங்களுக்குள்ளான நபர் மாதிபொல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாதிபொல பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கொலைக்கான காரணம் நேற்றுமாலை வரை உறுதிப்படுத்தப்படவில்லை என்பதுடன் சந்தேகநபரை கைதுசெய்வதற்கான மேலதிக விசாரணைகளை கலேவெல பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# ஏலக்காய் தொகையுடன் வியாபாரிகள் மூவர் சுங்க அதிகாரிகளினால் கைது!

இறக்குமதி செய்ய தடைவிதிக்கப்பட்டுள்ள ஏலக்காய் தொகையை சட்டவிரோதமாக டுபாயிலிருந்து நேற்று காலை நாட்டுக்கு எடுத்துவந்த வியாபாரிகள் மூவர் கட்டுநாயக்க விமானநிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக சுங்க ஊடகப் பேச்சாளர் பிரதி சுங்கப் பணிப்பாளர் சுதத்த சில்வா தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த 40 மற்றும் 45 வயதுக்கிடைப்பட்ட வியாபாரிகள் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

சந்தேகநபர்களினால் கொண்டுவரப்பட்ட பயணப் பொதிகளில் 01 என்ற அடிப்படையில், 105 கிலோ ஏலக்காய் மறைத்து கொண்டுவரப்பட்டிருந்த நிலையில் சுங்க அதிகாரிகளினால் மீட்கப்பட்டுள்ளது. இந்த ஏலக்காய் தொகையின் பெறுமதி ஒரு இலட்சத்து ஐயாயிரம் (10 இலட்சத்து ஐயாயிரம்) ரூபா என சுங்க ஊடகப்பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பான விசாரணைகள் பிரதி சுங்கப் பணிப்பாளர் வை.ஜீ. மொரகொடவினால் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் இந்த ஏலக்காய் தொகையை அரசுடைமையாக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

கைதான வியாபாரிகள் மூவரையும் எச்சரித்து விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


**2022 தேருநர் (வாக்காளர்) இடாப்பு கணக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**

2022 ஆம் ஆண்டிற்கான வாக்காளர்கள் கணக்கெடுப்பு 2022.02.01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனைத்து வீடுகளுக்கும் கணக்கெடுப்புப் படிவங்கள் விநியோகிக்கப்பட மாட்டாது.

2021 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்படாதிருப்பின் அல்லது 2021 ஆம் ஆண்டில் பதிவு தொடர்பான முகவரியில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமாயின் ; 2004.01.31 அல்லது அதற்கு முன்னர் பிறந்த நபர்களை பதிவு செய்துகொள்வதற்காக

மற்றும்

**18 வயது பூர்த்தியடைந்தவுடனேயே 04 மாதங்களுக்கொரு முறை குறைநிரப்பு இடாப்பு ஊடாக வாக்குரிமையை**

பெற்றுக்கொள்வதற்காக 16 - 18 வயதுகளுக்கிடைப்பட்ட (2006.01.31 இற்கு முன்னர் பிறந்த) பிரஜைகளைப் பதிவு செய்து கொள்வதற்காக கிராம அலுவலரை அல்லது மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

தேர்தல் ஆணைக்குழு
011-2868441 / www.elections.gov.lk

அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முடக்கும் நோக்கில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தியுள்ளதுடன், சமூக வலைத்தளங்களையும் முடக்கியுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை உடனடியாக பதவி விலகுமாறு கோரி நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நேற்றைய தினம் ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

எந்தவொரு அமைப்பும் உரிமைகோராத நிலையில் சமூக வலைத்தளங்கள் ஊடாகவே அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்துக்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென ஏனைய எதிர்க்கட்சிகள் தெரிவித்திருந்தன. எனினும், இதற்கு ஆதரவு தெரிவிப்பதாக எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்திருந்தார்.

இந்தப் போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறு சமூக ஊடகங்களில் பல்வேறு தரப்பினரும் கோரிக்கை முன்வைத்திருந்தனர்.

இந்நிலையில், இந்தப் போராட்டம் மிகப் பாரியளவில் எதிர்ப்பலையாக மாறும் என்பதை அரச தரப்பு அறிந்திருந்தது. இதனால் இதனை முடக்கும் வகையில் அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டு ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்த ஜனாதிபதி கோட்டாய ராஜபக்ஷ தீர்மானித்தார்.

ஜனாதிபதியின் இல்லத்தை முற்றுகையிட்டு மிரிஹானையில் கடந்த வியாழக்கிழமை நடத்தப்பட்ட போராட்டம் மக்கள் மத்தியில் எழுச்சியை தூண்டியதெனலாம். ஏனென்றால், இதற்கு முன்னர் அரசியல் கட்சிகளாலேயே அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களுக்கு தலைமைத்துவம் வழங்கப்பட்டன. எனினும், மிரிஹானை போராட்டமானது தன்னெழுச்சியாக மக்களால் முன்னெடுக்கப்பட்டதாகும்.

இதனை அடிப்படையாகக்கொண்டு நாடு முழுவதும் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் ஏப்ரல் மூன்றாம் திகதி தீவிரப்படுத்தப்படலாம் என அரசாங்கம் அஞ்சியது. அதனாலேயே பேஸ்புக், ட்விட்டர், இன்ஸ்டகிராம், வட்ஸ்அப் போன்றன முடக்கப்பட்டன.

ஒரு ஜனநாயக நாட்டில், கருத்துச் சுதந்திரம் என்பது பிரதான குறிகாட்டிகளில் ஒன்றாகும். அதனை முடக்க முயற்சிப்பதானது ஜனநாயகம் மீதான நம்பிக்கையை கேள்விக்குட்படுத்துவதாகவே அமையும்.

பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கும் நிலைமையில், அதனை சீர்செய்ய எந்தவொரு முன்னாயத்தமும் மேற்கொள்ளாத அரசாங்கத்தை மக்கள் ஒருபோதும் பாராட்டப்போவதில்லை. இன்று நாட்டு மக்களின் நிலைமை மோசமான முறையில் பாதிப்படைந்துள்ளது.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, ஏப்ரல் 04ஆம் திகதி, திங்கட்கிழமை

# அரசின் அதிகார துஷ்பிரயோகம்

எரிபொருள், எரிவாயு, மண்ணெண்ணெய், அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. பொருட்களின் விலைகள் நாளாந்தம் சடுதியாக அதிகரித்துச் செல்கின்றன. ஆதலால் குடும்பச் சுமையை தாங்கிக்கொள்ள முடியாத நிலைமைக்கு மக்கள் ஆளாகியிருக்கிறார்கள். அது மாத்திரமல்லாது நாளாந்தம் 13 மணித்தியாலங்கள் மின்துண்டிப்பும் மேற்கொள்ளப்படுகிறது.

இருளில் அல்லலுறும் மக்கள் தங்கள் கோபத்தை வெளிக்காட்டுகிறார்கள். அதற்கு தடை ஏற்படுத்துவதானது அரசாங்கத்தின் இயலாமையையே எடுத்துக்காட்டுகிறது.

திருமணத்தை நிறுத்துவதற்கு சீப்பை ஒழித்த கதையாக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இந்தச் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன.

#GoHomeGotta என்ற பதம் கடந்த இரு வாரங்களுக்கு மேலாக சமூக வலைத்தளங்களில் பேசுபொருளாக மாறியுள்ளது. இத்தனைநாள் அமைதியாக இருந்த பொதுமக்கள் நாட்டின் ஜனாதிபதிக்கு எதிராக வெகுண்டெழுந்திருக்கிறார்கள். அரசாங்கத்தின் அமைச்சர்கள் பொது நிகழ்வுகளுக்குச் செல்ல முடியாத வகையில் மக்கள் எதிர்ப்பினை வெளிக்காட்ட ஆரம்பித்திருக்கிறார்கள்.

போராட்டத்தை முடக்க முயற்சித்தால் அது வேறு வகையில் மாற்றம் பெறும். அத்துடன், அந்தப் போராட்டம் மேலும் வலுவடையும். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நடவடிக்கை மக்கள் மத்தியில் மேலும் எதிர்ப்பை உருவாக்கியிருக்கிறது. ஆதலால் சமூக ஊடகங்களில் இன்னும் தீவிரமாக தமது செயற்பாடுகளை முன்னெடுக்க பொதுமக்கள் தயாராவார்கள்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ பேஸ்புக் கணக்கில் பின்னூட்டங்களுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. ஆக, பொதுமக்கள் எந்தளவுக்கு ஜனாதிபதியை வெறுக்கிறார்கள் என்பது இதனூடாக புலனாகிறது.

ஜனநாயக ரீதியாக பொதுமக்களால் முன்னெடுக்கப்படும் போராட்டங்களுக்கு வழிவிடவேண்டும். அவர்களின் கருத்துகளை செவிமடுக்க வேண்டும். அதனைவிடுத்து போராட்டங்களை முடக்குவதற்கு அதிகார பலத்தைக்கொண்டு முயற்சிகள் மேற்கொள்ளப்படுமானால் அதன் விளைவுகள் பாரதூரமாகவே அமையும்.

நிபுணர்களின் ஆலோசனைகள் எதுவும் பெற்றுக்கொள்ளப்படாமல் தன்னிச்சையாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களால் நாடு இன்று இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. அரச நிதி முகாமைத்துவத்திலுள்ள குறைபாடுகளுக்கு உடனடி தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்காமல், எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் மக்கள் மீது அதிகாரத்தைப் பிரயோகிப்பதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்த நாட்டு மக்கள் ஜனநாயகத்தை விரும்புகிறார்கள். உச்சபட்ச அதிகாரத்தைப் பயன்படுத்தி தாங்கள் முடக்கப்படுவதை மக்கள் விரும்புவதில்லை. சுதந்திர இலங்கையில் பொதுமக்களின் கருத்து வெளிப்பாட்டுக்கு விதிக்கப்படும் தடை, சர்வதேசத்தின் மத்தியில் நாடு மீதான நன்மதிப்பை இழக்கச் செய்துவிடும் என்பதில் மாற்றுக்கருத்து கிடையாது.

# வில் ஸ்மித்:



# ஓர் இலட்சியத் தந்தையின் திரைவழிவம்

ஒஸ்கர் விருதுகள் அளிக்கப்படுவதற்கு முதல் நாள் நானும் என் மகளும் திரையரங்குக்குச் சென்று ‘கிங் ரிச்சர்ட் ’ திரைப்படம் பார்த்தோம். படம் பார்த்து முடித்ததும் வில் ஸ்மித் சிறந்த நடிகருக்கான ஒஸ்கர் விருதைப் பெறுவார் என்பதே எங்கள் எதிர்பார்ப்பாக இருந்தது. மறுநாள் ஒஸ்கர் விருதுகள் அறிவிக்கப்பட்டன. வில் ஸ்மித் 2021ஆம் ஆண்டுக்கான சிறந்த நடிகருக்கான விருதை வென்றுவிட்டார். இந்த விருது ‘கிங் ரிச்சர்ட் ’ என்கிற தந்தை பாத்திரத்தில் வில் ஸ்மித் கனகச்சிதமாக நடித்ததற்கானதுதான். என்றாலும் கறுப்பினத்தவர்கள் அனைவரின் போராட்டத்துக்குமான அங்கீகாரம் என்று சொல்வதே பொருத்தமாக இருக்கும்.

இந்தப் படம் மிகவும் உணர்வுபூர்வமானது. தன் மகள்களின் இலட்சியத்துக்காக தன் வாழ்க்கையையும் உழைப்பையும் இளமையையும் தூக்கத்தையும் ஆசைகளையும் விலையாகக் கொடுத்த ஒரு தந்தையின் கதை இது. டென்னிஸ் உலகத் தாரகைகளான வீனஸ் வில்லியம்ஸ், செரீனா வில்லியம்ஸ் ஆகிய இருவரையும் அத்துறையில் மிளிர வைப்பதற்காக அவர்களின் தந்தை ரிச்சர்ட் படும் பாடுகள் குறித்து இந்தத் திரைப்படம் பேசுகிறது. இப்படி நாம் ஒரே வாக்கியத்தில் கதையை எளிதாகச் சொல்லிவிட்டாலும், அதற்காக அவர் மேற்கொண்ட முயற்சிகளும், அவரின் தவிப்புகளும் நம்மைப் பதைபதைக்க வைக்கின்றன. எவ்வளவு வலி, எவ்வளவு வேதனை.

இந்தப் படம் வெற்றியை மட்டும் பேசவில்லை, அவ்வெற்றிக்காக ஒரு தந்தை தரும் விலையை, குறிப்பாக, கறுப்பினத்தைச் சேர்ந்த ஏழைத் தந்தை தரும் விலையைப் பேசுகிறது. ஆமிர் கானின் ‘டங்கல்’ திரைப்படம் ஏறக்குறைய இதே சாயல் கொண்டதே. ஆனால், அந்தத் தந்தையைவிட இன்னொரு கூடுதல் சுமை இந்தத் தந்தை ஒரு கறுப்பர் என்பது. தம் பிள்ளைகள் குறித்துக் கனவு காணும் கறுப்பின ஏழைத் தந்தை கூடுதல் சுமை சுமக்க வேண்டியவர். அவருடைய ஒரு நாள் என்பது எத்தகையதாக இருக்கும்?

வில் ஸ்மித்தின் கண்கள் அதை படம் முழுக்கப் பேசுகின்றன. தூக்கமும் சோர்வும் அப்பிய கண்கள். இரு வேறு பணிகளை இரண்டு ஷிப்ட்டுகளாகச் செய்யும், ஓய்வு நாடும் உடல்மொழி. எனினும், இடைவெளி விட்டால் கனவு எட்டாத் தூரமாகிவிடும் என்ற பரிதவிப்பில், சிரமப்பட்டேனும் சுறுசுறுப்பாக்கிக்கொள்ளும் பிரயத்தனத்தை வெளிப்படுத்தும் ரிச்சர்டாக வாழ்ந்திருக்கிறார் வில் ஸ்மித். வாய்ப்பு கிடைக்கும் இடங்களில் எல்லாம் சென்று, தன் மகள்களின் மீதான நம்பிக்கையோடு, கூடவே தன்மானத்தை விட்டுவிடாத தலைநிமிர்ந்த அயராத முயற்சியை வெளிப்படுத்தி, மனிதர் நம்மை அசரடிக்கிறார்.

கட்டுக்கோப்பான குடும்பத்தை வழிநடத்தும் தந்தை. அழகான குடும்பம் என சிறுசிறு காட்சிகள் மனம் கவர்கின்றன. தனியே குழந்தைகளிடம் உரையாடுவதற்கு இந்தத் தந்தைக்கு நேரம் ஏது? எனவே, பயிற்சி முடிந்து வீடு திரும்பும் நேரங்களில்தான் அழகிய உரையாடல்கள். “மகள்களே, என் அம்மா சொல்லுவாள், உலகிலேயே மிக ஆபத்தானவள் தானாகச் சிந்திக்கும் தனித்தன்மை மிக்க பெண்தான் என. நீங்களும் அப்படியே இருக்க வேண்டும்” என்கிறது ஓர் உரையாடல். பள்ளிப் படிப்பு முக்கியம். எனவே, ‘ஸ்பெல்லிங்’ பயிற்சியெல்லாம் வண்டியில் வரும்போதுதான். பூங்காவில் பயிற்சி மேற்கொள்ளும்போதும் மறக்காமல் ‘If you fail to plan, you will plan to fail’ (‘திட்டமிடத் தவறினால் தவறிழைக்கத் திட்டமிட்டுவிடுவீர்கள்) என்ற வாசகம் வீட்டிலிருந்து கொண்டுவந்து ஒட்டப்படுகிறது.

ஏழ்மை, எனினும் தன்னம்பிக்கை மிக்க தந்தை. ஒரு பயிற்சிக்கூடத்தில் இலவசம் என்று மகள்கள் இருவரும் பர்கர் உண்கின்றனர். அதைக் கீழே போடச் சொல்லும் தந்தை, இந்த உலகில் இலவசம் என எதுவும் இல்லை. இலவசங்கள் நம் கண்ணுக்குத் தெரியாத கொக்கிகள் கொண்டவை. எனவே, அவற்றிடமிருந்து விலகியே இருங்கள் என அறிவுறுத்துவார். எவ்வளவு உண்மை.

“மகளே நீ தோற்றாலும் ஜெயித்தாலும் உன்னோடு நான் இருப்பேன். கறுப்பினச் சிறுவனாக, தெரியாமல் கையைத் தொட்டுப் பணம் தந்துவிட்டதற்காக வெள்ளையர்களிடம் நான் அடிவாங்கியபோது, அப்பா நம்மைக் காப்பாற்ற மாட்டாரா என்று தேடினேன். அப்போது, ஓடி ஒளிந்துகொண்ட என் தந்தையைப்போல் நான் உன்னை விட்டுவிட்டுப் போகமாட்டேன். ஆனால், நீ ஆடப்போகும் இந்த ஆட்டம் உன் எதிர்காலம் குறித்தது மட்டுமல்ல, பல நூறு கறுப்பினக் குழந்தைகளின் எதிர்காலமும் இதில் அடங்கியிருக்கிறது. நீ வெற்றிபெற்றால், பல நூறு கறுப்பினக் குழந்தைகளுக்குப் புது வாசல் திறக்கும். தோற்றால் அது மூடப்படும். அதை கவனத்தில் கொண்டு ஆடு” என்று அந்தத் தந்தை பேசும் இடம் அபாரமானது. கறுப்பர்கள் தங்கள் வெற்றிக்குக் கூடுதல் விலை தர வேண்டியவர்கள். தகுதி இருப்பினும் வெற்றிப் படிகளில் ஏற அது மட்டும் போதாது. கீழே தள்ளப்படவும் அங்கீகாரம் மறுக்கப்படவும் முக்கிய காரணமாக அவர்களின் நிறம்தான் இருக்கிறது. இந்தியச் சூழலில், இதைச் சாதியோடு பொருத்திப் பார்க்கலாம். ஒரு கலைப் படைப்பால்தான் மானுட வேதனையின், வலியின் வீரியத்தை நுட்பமாக உணர்த்த முடியும். அதை இந்தப் படம் சிறப்பாகச் செய்கிறது.

- சித்ரா பாலசுப்ரமணியன் -எழுத்தாளர்
நன்றி - இந்து தமிழ்

## தவக்கால சிந்தனை



### என்னைப் பின்தொடர்பவர் இருளில் நடக்கமாட்டார்

மீண்டும் இயேசு மக்களைப் பார்த்து, உலகின் ஒளி நானே; என்னைப் பின்தொடர்பவர் இருளில் நடக்கமாட்டார்; வாழ்வுக்கு வழி காட்டும் ஒளியைக் கொண்டிருப்பார் என்றார்.

பரிசேயர் அவரிடம், உம்மைப்பற்றி நீரே சான்று பகர்கிறீர்; உம் சான்று செல்லாது என்றனர். அதற்கு இயேசு, என்னைப்பற்றி நானே சான்று பகர்ந்தாலும் என் சான்று செல்லும். ஏனெனில் நான் எங்கிருந்து வந்தேன், எங்குச் செல்கிறேன் என்பது எனக்குத் தெரியும். நான் எங்கிருந்து வருகிறேன், எங்குச் செல்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியாது. நீங்கள் உலகப் போக்கின்படி தீர்ப்பு அளிக்கிறீர்கள். நான் யாருக்கும் தீர்ப்பு அளிப்பதில்லை. ஆனால், நான் தீர்ப்பு வழங்கினால், அத்தீர்ப்புச் செல்லும். ஏனெனில் நான் தனியாகத் தீர்ப்பு வழங்குவதில்லை; என்னை அனுப்பிய தந்தையும் என்னோடு இருக்கிறார். இருவருடைய சான்று செல்லும் என்று உங்கள் சட்டத்தில் எழுதியுள்ளது அல்லவா? என்னைப் பற்றி நானும் சான்று பகர்கிறேன்; என்னை அனுப்பிய தந்தையும் சான்று பகர்கிறார் என்றார்.

அப்போது அவர்கள், உம் தந்தை எங்கே இருக்கிறார்? என்று கேட்டார்கள். இயேசு மறுமொழியாக, உங்களுக்கு என்னையும் தெரியாது; என் தந்தையையும் தெரியாது. என்னை உங்களுக்குத் தெரிந்திருந்தால் ஒருவேளை என் தந்தையையும் தெரிந்திருக்கும் என்றார்., கோவிலில் காணிக்கைப் பெட்டி அருகிலிருந்து இயேசு கற்பித்துக்கொண்டிருந்தபோது இவ்வாறு சொன்னார். அவரது நேரம் இன்னும் வராததால் யாரும் அவரைப் பிடிக்கவில்லை.

# பெற்றோலியத்திற்கு மாற்றாகும் மர உருண்டைகள்!

காட்டில் விளையும் மரத்தை எரிபொருளாக பயன்படுத்துவது புதிதல்ல. ஆனால், அந்த மரத்தை சிறிய உருண்டைகளாக்கி அவற்றை எரிபொருளாக பயன்படுத்துவதுதான் புதிது.

கோஸ்டா ரிகாவில் ஆண்டுக்கு 1.2 மில்லியன் தொன் மரங்கள் விளைவிக்கப்படுகின்றன.. அதில் 40 சதவீதம் வீணாக்கப்படுகிறது. இதே விகிதத்தில் உலகெங்கும் மரங்கள் வீணாக்கப்படுகின்றன. வீணாக குப்பையில் சேரும் மரங்கள், மக்கும்போது மீத்தேன் வாயுவை வெளியேற்றுகின்றன. இவை புவி வெப்பமாதலுக்கு துணைபோகின்றன.


பெல்லட்டிக்ஸ் என்ற கோஸ்டா ரிக்கா நிறுவனம், மரங்கள் மற்றும் வேளாண் கழிவுகளை, அடித்து நெகிழ்த்தி, உலர்த்தி, இறுக்கி, உருண்டைகளாக ஆக்கும் புதிய தொழில்நுட்பத்தை படைத்துள்ளது. இதனால், சிறிய மர உருண்டைகள் நின்று நெடுநேரம் எரிவதோடு, பெற்றோலியப் பொருட்களைவிட 50 சதவீதம் விலை குறைவாகவும் உள்ளன.



மேலும் பெல்லெடிக்ஸ் உருவாக்கியுள்ள இந்த நுட்பத்தால், சிறிய ஆலைகளை பல இடங்களில் கட்டுவிக்க முடியும். உதாரணமாக, மரவேலைகள் அதிகம் நடக்கும் மர அறுப்பு மில்கள், மரக் கடைகள், மர குடோன்களுக்கு அருகிலேயே பெல்லெட்டிக்ஸ் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் ஆலைகளை நிறுவ முடியும். இதன்மூலம், மர உருண்டைகளை வெகுதூரம் எடுத்துச் செல்லும் செலவும், அந்த வாகனங்கள் உமிழும் மாசும் மிச்சப்படும்.பெல்லெட்டிக்சின் மர உருண்டைகள் பொய்லர்கள், தொழிற்சாலை உலைகள், வீடுகளுக்கு கதகதப்பூட்டுதல் போன்றவற்றுக்கு மிகவும் ஏற்றவை.

## நக்கல் நமசிவாயம்

**நாட்டில ஒண்டு இருந்தா ஒண்டு இல்ல... டீசல் இருந்தா கரண்ட் இல்ல...கரண்ட் இருந்தா டீசல். இல்ல..போனில சார்ஜ் இருக்கிறப்போ சமூக ஊடகங்கள் தடை... சோஷல் மீடியா இருக்கிறப்ப போன், கம்பியூட்டர்களில சார்ஜ் இல்ல... இதெல்லாம் இருக்கிற நேரம் வரும் அப்போ மக்கள் கையில காசு இருக்காது... வாழ்க்கை பெரிய வட்டம் பாருங்கோ...**



## இன்றைய நாளில்...

- ★ 1581 – உலகைச் சுற்றி வலம் வந்தமைக்காக பிரான்சிஸ் டிரேக் சர் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.
- ★ 1905 – இந்தியாவில் இமாச்சலப் பிரதேசம், காங்ரா, தரம்சாலா ஆகிய இடங்களில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 20,000 பேர் வரை உயிரிழந்தனர்.
- ★ 1968 – நாசாவின் அப்பல்லோ 6 விண்கப்பல் விண்ணுக்கு ஏவப்பட்டது.
- ★ 1979 – பாகிஸ்தானின் முன்னாள் அரச தலைவர் சுல்பிக்கார் அலி பூட்டோ தூக்கிலிடப்பட்டார்.
- ★ 1983 – சாலஞ்சர் விண்ணோடம் தனது முதலாவது விண்வெளிப் பயணத்தை ஆரம்பித்தது.

# அரசு பதவி விலகி சிறந்த ஆட்சியை உருவாக்க வழிவிட வேண்டும் – ரிஷாட் எம்.பி.





நாட்டு மக்களை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டு, அவர்களை நிம்மதியாக வாழவைக்க வேண்டிய பொறுப்பு இந்த அரசாங்கத்துக்கு உள்ளது. இந்த தார்மீக பொறுப்பிலிருந்து அரசாங்கம் ஒருபோதும் தப்பித்துக்கொள்ள முடியாதென மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப் பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

வவுனியா சாளம்பைக்குளத்தில் நேற்றுமுன்தினம் (02) இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர்,

"இந்த நாட்டில் வாழுகின்ற மக்கள் பசியாலும் பட்டினியாலும் பொருளாதார நெருக்கடிகளினாலும் இன்று வீதிக்கு இறங்கி போராடிக்கொண்டிருக்கின்றனர். "எம்மை வாழ விடுங்கள், எமது பிள்ளைகளை வாழ விடுங்கள்" என்ற கோஷமே எங்கு பார்த்தாலும் ஒலிக்கின்றது. மக்கள் உண்ண உணவின்றி, வாழ்வதற்கு வழியில்லாமல், வேதனையின் விளிம்பில் இருப்பதனாலேயே, நாடு முழுவதிலும் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்கின்றனர். அவ்வாறான மக்களின் மீது தங்களுடைய அதிகாரத்தை பிரயோகித்து, அடக்கி, அச்சுறுத்தி, சிறைப்படுத்தி இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது.

இந்த ஆட்சியாளர்கள் ஆட்சிபீடத்தில் ஏறிய நாள் தொடக்கம், கடந்த இரு வருடங்களாக இனவாதத்தையும் மதவாதத்தையும் விதைத்து, இந்த நாட்டைக் குட்டிச்சுவராக்கிவிட்டனர். இன்று அவர்களுக்கு வாக்களித்த 69 இலட்சம் மக்களும் கூட அரசுக்கு எதிராக வீதியில் இறங்கியுள்ளனர். இந்த நிலையில் அரசாங்கம் உடனடியாக தங்களுடைய பதவியிலிருந்து விலகி, நாட்டு மக்கள் விரும்புகின்ற, நாட்டுக்கு நல்லது செய்யக் கூடிய ஒரு ஆட்சியை உருவாக்குவதற்கு வழிவகுக்க வேண்டும். ஜனாதிபதியும் ஆட்சியாளர்களும் அமைச்சர்களும் ஒன்றிணைந்து விட்டுக்கொடுப்பு செய்வதன் ஊடாக மட்டும்தான் ஒரு தீர்வைக் காண முடியும். இவர்களால் இந்த நாட்டை கொண்டு நடத்த முடியாது என்பதை கடந்த இரு வருடங்களில் நிருபித்துவிட்டனர். இவர்களால் இந்த நாடு தொடர்ந்தும் அதலபாதாளத்தில் வீழ்ந்துகொண்டிருக்கிறது.

எனவே, நாட்டு மக்களின் உணர்வுகளை மதித்து, நாட்டின் நலனைக் கருத்திற்கொண்டு, இன, மத பேதங்களுக்கு அப்பால் ஒன்றுபட்டு, மக்கள் விடுக்கின்ற கோரிக்கைகளுக்கு ஆட்சியாளர்கள் செவிசாய்க்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கின்றோம்" என்று கூறினார்.

காட்டில் விளையும் மரத்தை எரி பொருளாக பயன்படுத்துவது புதிதல்ல. ஆனால், அந்த மரத்தை சிறிய உருண்டைகளாக்கி அவற்றை எரிபொருளாக பயன்படுத்துவதுதான் புதிது. கோஸ்டாரிகாவில் ஆண்டுக்கு 1.2 மில்லியன் தொன் மரங்கள் விளைவிக்கப்படுகின்றன. அதில் 40 சதவீதம் வீணாக்கப்படுகிறது. இதே விகிதத்தில் உலகெங்கும் மரங்கள் வீணாக்கப்படுகின்றன. வீணாக குப்பையில் சேரும் மரங்கள், மக்கும்போது மீத்தேன் வாயுவை வெளியேற்றுகின்றன. இவை புவி வெப்பமாதலுக்கு துணைபோகின்றன.

பெல்லட்டிக்ஸ் என்ற கோஸ்டா ரிக்கா நிறுவனம், மரங்கள் மற்றும் வேளாண் கழிவுகளை, அடித்து நெகிழ்த்தி, உலர்த்தி, இறுக்கி, உருண்டைகளாக ஆக்கும் புதிய தொழில்நுட்பத்தை படைத்துள்ளது. இதனால், சிறிய மர உருண்டைகள் நின்று நெடுநேரம் எரிவதோடு, பெற்றோலிய பொருட்களைவிட 50 சதவீதம் விலை குறைவாகவும் உள்ளன.

மேலும் பெல்லெடிக்ஸ் உருவாக்கியுள்ள இந்த நுட்பத்தால், சிறிய ஆலைகளை பல இடங்களில் கட்டுவிக்க முடியும். உதாரணமாக, மரவேலைகள் அதிகம் நடக்கும் மர அறுப்பு மில்கள், மரக் கடைகள், மர குடோன்களுக்கு அருகிலேயே பெல்லெட்டிக்ஸ் தொழில்நுட்பத் தைப் பயன்படுத்தும் ஆலைகளை நிறுவ முடியும். இதன் மூலம், மர உருண்டைகளை வெகு தூரம் எடுத்துச் செல்லும் செலவும், அந்த வாகனங்கள் உமிழும் மாசும் மிச்சப்படும். பெல்லெட்டிக்சின் மர உருண்டைகள் பொய்லர்கள், தொழிற்சாலை உலைகள், வீடுகளுக்கு கதகதப்பூட்டுதல் போன்றவற்றுக்கு மிகவும் ஏற்றவை.

# தேசிய மீலாத் விழாவை குருநாகலில் நடத்த ஏற்பாடு





(இக்பால் அலி)



இம்முறை தேசிய மீலாத் விழா பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் குருநாகல் மாவட்டத்தில் ஒக்டோபர் மாதத்தில் நடைபெறும்.

முஹம்மது நபி (ஸல்) அவர்களின் பிறந்த தினத்தை நினைவு கூரும் 2022ஆம் ஆண்டிற்கான தேசிய மீலாத் விழா குருநாகல் மாவட்டத்தில் ஒக்டோபர் மாதத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் குருநாகல் தெலியாகொன்ன ஹிஸ்புல்லா மத்திய கல்லூரியில் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் சமய கலாசார பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வருடா வருடம் நடத்தப்படும் தேசிய மீலாத் விழா இரு வருடங்கள் கொரோனா காரணமாக தடைப்பட்டிருந்த இந்நிகழ்வு, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் முஸ்லிம் விவகார இணைப்புச் செயலாளர் அப்துல் சத்தார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க, இம்முறை குருநாகல் மாவட்டத்தில் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன் விசேட கலந்துரையாடல் குருநாகல் மாநகர சபையின் கேட்போர் கூடத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் முஸ்லிம் விவகார இணைப்புச் செயலாளர் அப்துல் சத்தார் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக முஸ்லிம் சமய கலாசார பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் இப்றாஹிம் அன்சார் மற்றும் குருநாகல் மாநகர முதல்வர் துசார சஞ்ஜீவ ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த தேசிய விழாவை முன்னிட்டு குருநாகல் மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. முஸ்லிம் கிராமங்களிலுள்ள உள் வீதிகள், பாடசாலைகள் அபிவிருத்தி, பள்ளிவாசல்களுக்கான நிதி ஒதுக்கீடுகள், குருநாகல் மாவட்டத்தில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திடையடைந்த மாணவர்கள், க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர்தரம் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வுகள், மூத்த உலமாக்கள் கௌரவிப்பு, குருநாகல் மாவட்ட முஸ்லிம்களின் வரலாற்று நூல் மற்றும் சிறப்பு மலர் வெளியிடுதல் போன்ற முக்கிய அம்சங்கள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டன. இவ்விழாவுக்கான ஏற்பாடுகளை முன்னெடுப்பதற்கான குழுக்கள் தெரிவுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது முஸ்லிம் சமய கலாசார பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கலாசார உத்தியோகஸ்தர் எம். எம். முப்தி, குருநாகல் மாவட்ட செயலகத்தின் கலாசார உத்தியோகஸ்தர் மரைக்கார், மஹவ கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர், முஸ்லிம் சமய கலாசார பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# இயலாமை கொண்ட குடும்ப ஆட்சியே பொருளாதாரப் பிரச்சினைக்குக் காரணம்

## சட்டத்தரணி நவரத்ன பண்டா

(கண்டி நிருபர்)

ஒரு குடும்பத்தின் இயலாமையும் அக்குடும்ப ஆட்சியுமே நாட்டை சீரழித்து விட்டது. அதுவே இன்றைய பொருளாதார நெருக்கடிக்குக் காரணமாகும் என சட்டத்தரணி நவரத்த பண்டா தெரிவித்தார்.

கண்டியில் நேற்றுமுன்தினம் (02) இடம்பெற்ற ஊடக நீதிக்காக முயலும் சட்டத்தரணிகள் சங்கம் நடத்திய ஊடக சந்திப்பில் கலந்துகொண்டே இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டின் பிரதான அமைச்சுகள் மற்றும் பிரதான பதவிகளில் ஒரே குடும்பம் மட்டுமே தமது கைவசம் வைத்து ஆட்சி நடத்துகிறது. நாட்டின் இன்றைய இப்பிரச்சினைக்கு பிரதான காரணம் இதுவேயாகும். எனவே குறிப்பிட்ட குடும்பத்தின் இயலாமையையே இது வெளிக்காட்டுகிறது.

இதற்கு தற்போது செய்யக்கூடிய ஒரே வழி நாடாளுமன்றத்தைக் கலைத்து பொருத்தமான ஆட்சியாளரைத் தெரிவு செய்யும் சந்தர்ப்பத்தை பொதுமக்கள் வசம் வழங்குவதாகும். அப்படியல்லாத பட்சத்தில், ஆளுங்கட்சி நாடாளுமன்ற அங்கத்தவர்கள் தத்தமது வீடுகளுக்கு செல்ல முடியாத நிலையை ஏற்படுத்தும்.

70 வருடகாலமாக நாட்டில் அச்சிடப்பட்ட பணத்தைப் போன்று 23 மடங்கு பணம் 2020 ஆம் ஆண்டின் பின் அச்சிடப்பட்டுள்ளது.

தற்போது அச்சிடப்பட்டுள்ள பணத்தை வெளியேற்றாது வைத்துக்கொள்ளும்படி மத்திய வங்கி அதிகாரிகளைக் கேட்கிறோம். இல்லாவிடில், நாட்டில் பணவீக்கம் மேலும் ஏற்பட்டு ஓய்வூதியம் பெறுவோர்களது பணம் பெறுமதியற்று அவர்களால் எதனையும் ஈடுகொடுக்க முடியாது போய்விடும். ஓய்வூதியக்காரர்கள் நிலையான சேமிப்பில் வைத்துள்ள பணத்திற்கு எதுவித பெறுமதியும் இல்லாமற்போகும் என்றார்.

# ஊரடங்கு சட்டத்தால் முடக்கப்பட்ட எங்கள் போராட்டத்தை 10ஆம் திகதி முன்னெடுப்போம்

## பழனி திகாம்பரம் எம்.பி. பகிரங்க அறிவிப்பு



(க.கிஷாந்தன்)

மக்கள் எழுச்சிக்கு அஞ்சி அரசு ஊரடங்கு உத்தரவை பிறப்பித்துள்ளதால் தமிழ் முற்போக்கு கூட்டணியின் ஏற்பாட்டில் தலவாக்கலையில் நேற்று (03) நடைபெறவிருந்த போராட்டம் பிற்போடப்படுகின்றது. எனினும், எதிர்வரும் 10 ஆம் திகதி குறித்த போராட்டம் முன்னெடுக்கப்படும் - என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

தலவாக்கலை கதிரேசன் ஆலய மண்டபத்தில் நேற்றுமுன்தினம் (02) நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

நாட்டில் பொருட்களின் விலைகள் உச்சம் தொட்டுள்ளன. அத்தியாவசியப் பொருட்களுக்குகூட கடும் தட்டுப்பாடு நிலவுகின்றது. சமையல் எரிவாயு மற்றும் எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு மக்கள் வரிசையில் காத்துக்கிடக்க வேண்டியுள்ளது. இவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், நாட்டை ஆளக்கூடியவர்களிடம் ஆட்சியை ஒப்படைக்குமாறு வலியுறுத்தியும் தலவாக்கலையில் நேற்று (03) போராட்டம் முன்னெடுக்கப்படவிருந்தது. இதில் சுமார் 20 ஆயிரம் பேர் பங்கேற்கவிருந்தனர். அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.

எனினும், மக்கள் எழுச்சிக்கு அஞ்சி, போராட்டங்களை தடுக்கும் நோக்கில் அரசு ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்துள்ளது. எனவே, நாளை இடம்பெறவிருந்த போராட்டம், அடுத்த ஞாயிற்றுக்கிழமை 10ஆம் திகதிவரை பிற்போடப்படுகின்றது. அன்றைய தினம் உணர்வுபூர்வமாக பங்கேற்குமாறு மக்களுக்கு அழைப்பு விடுக்கின்றோம்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த பிறகு நெருக்கடிகள் தலைவிரித்தாடுகின்றன. 13 மணிநேரம் மின்வெட்டு அமுல்படுத்தப்படுகின்றது. இந்நிலைமை நீடித்தால் தேயிலை தோட்டங்களையும் மூடவேண்டிவரலாம். எனவே, இந்த ராஜபக்ஷ குடும்ப ஆட்சியை விரட்ட வேண்டும். புதிய ஆட்சியை உருவாக்க வேண்டும்." - என்றார்.




ஊரடங்கு நேரத்திலும் நேற்று பொதுமக்கள் சிலர் மஹரகமவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தினர்.

# நாட்டை முடக்கி மக்களின் ஜனநாயக உரிமையை பறித்துள்ளது அரசாங்கம்

## வடிவேல் சுரேஸ் எம்.பி. குற்றச்சாட்டு



நாட்டை முடக்கி மக்களுடைய ஜனநாயக உரிமையை அரசாங்கம் பறித்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியினால் சுதந்திர சதுக்கத்தில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போராட்டத்தில் கலந்துகொண்டே அவர் மேற்கண்டவாறு கருத்து தெரிவித்திருந்தார்.


தொடர்ந்து அவர் தெரிவிக்கையில்,

நாடு பாரியதொரு பின்னடைவை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. எங்கும் எதிலும் தட்டுப்பாடு. மக்கள் இன்று பொறுமை இழந்து வீதிக்கு இறங்கி இருக்கின்றார்கள். இத்தகையதொரு சூழ்நிலையில் ஒட்டுமொத்த நாட்டு மக்களுடைய கருத்து சுதந்திரத்தையும் நாட்டை முடக்கி இல்லாதொழித்திருக்கின்றது இவ் அரசாங்கம்.

நாட்டில் அவசரகால சட்டத்தை பிரகடனப்படுத்துவதற்கு இது யுத்த காலம் அல்ல. இது பஞ்ச காலம், பட்டினி காலம். நாட்டை ஆட்சி செய்யும் ஒரு சில சுயநலவாதி தலைமைகள் அவர்களுடைய தேவைக்கு ஏற்றாற்போல் திடீரென்று நாட்டை முடக்கி மக்களை மீண்டும் மீண்டும் சிரமத்திற்கு உட்படுத்தியிருக்கின்றார்கள்.

சாது மிரண்டால் காடு கொள்ளாது அதற்கமைய, இன்று ஒட்டுமொத்த இலங்கைவாழ் மக்களும் சர்வாதிகார ஆட்சியாளர்களை வீட்டிற்கு அனுப்புவதற்கு தயாராகிக் கொண்டிருக்கின்றார்கள். சமூக வலைத்தளங்களை முடக்குவதினாலும் நாட்டை முடக்குவதினாலும் மக்கள் மனதை முடக்க முடியாது. மக்கள் தீர்மானித்து விட்டார்கள் வீடு செல்ல தயாராக இருங்கள் - என்றார்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com





## நாடளாவிய ஊரடங்கால்
# மலையக பெருந்தோட்டப் பகுதிகள் ஸ்தம்பிதம்
# வெறிச்சோடிய பெருநகரங்கள்; மக்களின் இயல்புநிலையும் பாதிப்பு!

(க.கிஷாந்தன், செ.தி.பெருமாள்)

நாட்டில் நேற்றுமுன்தினம் (02) மாலை 06 மணிமுதல் இன்று (04) காலை 6 மணிவரை ஊரடங்கு விதிக்கப்பட்டுள்ள நிலையில், மலையக பெருந்தோட்ட நகரங்களின் இயல்புநிலை ஸ்தம்பிதமடைந்தது.

நகரையும் அதனை அண்மித்த பகுதிகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. பொலிஸார் ரோந்து நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர். ஊரடங்கு அமுலிலுள்ள காலப்பகுதியில் அத்தியாவசிய சேவைகளை முன்னெடுப்பதற்கும் இடமளிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் ஊரடங்கை மீறி செயற்பட முற்பட்ட சிலர், பொலிஸாரால் கடுமையாக எச்சரிக்கப்பட்டு திருப்பியனுப்பட்டனர்.

மலையக நகர்ப் பகுதி இவ்வாறு முடக்கப்பட்டிருந்தாலும் தோட்டப் பகுதிகளில் இயல்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. தொழிலாளர்கள் வேலைக்குச்சென்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மஸ்கெலியா பொலிஸ் பாதுகாப்புப் பிரிவில் ஊரடங்குச் சட்டம் மிகவும் கடுமையாக அமுல்படுத்தப்பட்டுள்ளது.

மஸ்கெலியா பொலிஸார் மற்றும் அதிரடிப் படையினர் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டிருந்தனர். இதனால், மக்கள் நடமாட்டம் இல்லாது நகரம் வெறிச்சோடி உள்ளது.

அன்றாட தொழில் புரிவோர் மிகவும் சிரமப்பட்டு வருவதாக புகார் தெரிவிக்கின்றனர். மேலும் கடந்த வெள்ளிக்கிழமை முதல் சிவனொளிபாதமலைக்கு அதிகளவில் யாத்திரிகர்கள் வாகனங்களிலும் பஸ்கள், புகையிரத மூலமாக ஹட்டன் வந்து பஸ்கள் மூலம் நல்லதன்னி வந்து சிவனொளி பாதமலைக்கு சென்றவர்கள் திரும்பிச் செல்ல வழியில்லாமல் தவிக்கும் நிலையும் ஏற்பட்டிருந்தது.

Friendly Ship FOUNDATION
THE JOURNEY TOWARDS SOCIAL DAWN

# ப்ரெண்ட்லி ஷிப் சமூக அமைப்பின் இரண்டாவது ஆண்டு விழா










































பதுளை நிருபர்

தன்னலமற்ற பணியுடன் சமூக விடியலை நோக்கிய பயணம் என்ற மகுட வாசகத்திற்கமைய துரிதமாக செயற்பட்டுவரும் பதுளையை தளமாககொண்டியங்கும் ப்ரெண்ட்லி ஷிப் என்ற சமூக அமைப்பின் இரண்டாவது ஆண்டு விழா, இன்று இடம்பெறுவதையொட்டி, இக் கட்டுரை வெளியாகின்றது.

2020ஆம் ஆண்டு மனதால் ஒன்றிணைந்து தன்னலமற்ற பணியுடன் சமூக விடியலை நோக்கிய பயணத்தில் தம்மையே அர்ப்பணித்துக்கொண்ட நண்பர்களின் கூட்டம் ஒன்றிணைந்து இன, மத, மொழி வேறுபாடுகளின்றி, மனிதம் ஒன்றே புனிதம் என்ற வகையில் ப்ரெண்ட்லி ஷிப் உதயமாகியது.

ஊவா மண்ணின் அரச, தனியார், அரச சார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றுபவர்கள், சுயதொழில் செய்வோர், ஊடகத்துறையினர் மட்டுமன்றி, உயர்கல்வி நிறுவனங்களில் கல்வி கற்பவர்களையும் உள்வாங்கிய நிலையிலான முப்பதுக்கு மேற்பட்டவர்கள் இணைந்து 2020இல் முதலாவது ஒன்றுகூடல் நிகழ்வு நடத்தப்பட்டது. ப்ரெண்ட்லி ஷிப் அமைப்பின் யாப்பு, உத்தியோகபூர்வ இலச்சினை, குறிக்கோள், கீதம், கவிதை அமைப்பின் அங்கத்தினர்கள் அனைவரும் ஆலோசனை சபையினர் முன்னிலையில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

தன்னிறைவான சமூகம் உதயமாவதற்கு பங்களிப்பினை வழங்கும் தூய்மையான பயணம் என்பதனை தொலைநோக்காகவும், எமது சமூகம், கல்வி, கலாசாரம், விளையாட்டு, பொருளாதாரம், திறன் அபிவிருத்தி போன்ற துறைகளில் பூரணத்துவம் அடைவதற்கு, உணர்வுபூர்வமாக பங்களிப்பினை வழங்குதலே குறிக்கோளாகும். இதயமொன்றை இரு கரங்கள் தாங்கி நிற்கும் இவ் இலச்சினையின் பொருளாவது, சமூக சேவைக்கான எண்ணம் இதயத்திலிருந்து உருவாக்கும் அதேவேளை, தோல் கொடுக்கும் தோழமைகளும் தோல்வியடையாதவாறு உடலிருந்து சமூக சேவையை தார்மீகக் கடமையென மேற்கொள்ள வேண்டுமென்பதையே குறித்து நிற்கின்றது.

ப்ரெண்ட்லி ஷிப் அமைப்பின் ஸ்தாபகத் தலைவர் எஸ்.யசோதரராஜன், செயலாளர் எம்.எவ்.ஆரிஃபா, பொருளாளர் சி.அன்டன் ஜோய், துணைத்தலைவர் ஆர்.லோசன பிரவின், துணைச் செயலாளர் டி.கிரிஷாந்த், கணக்காய்வாளர் டி. எல்ராய் பிராங்ளின்.

போதகர் கலைச்செல்வம் டேனியல், ஊவா - வெல்லஸ்ஸ பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் மார்க்கண்டன் ரூபவதனன், சிரேஷ்ட சட்டத்தரணி க. ரமேஸ் குமார், பண்டாரவளை மாநகர சபை ஆணையாளர் த. கஜேந்திரகுமார், தொழிலதிபர் கே. சுரேஸ்குமார், சமூக ஆய்வாளர் வ. அந்தனீஸ் ஆகியோர் ப்ரெண்ட்லி ஷிப் அமைப்பின் ஆலோசகர் சபையில் அங்கம் வகித்து, பெறுமதிமிக்க ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர்.

ஊவாவில் பதுளையை தளமாகக்கொண்டு இயங்கிவரும், அர்ப்பணிப்புடனான பல மனங்கள் சங்கமித்து, தோழமைகள் கரம் கோர்த்து கட்டியெழுப்பிய தோழமையின் கப்பல் என்ற ப்ரெண்ட்லி ஷிப் குடும்பமாக முன்னெடுத்த வேலைத்திட்டங்கள் ஒவ்வொன்றும் சமூகத்தின் அதிமுக்கிய தேவைகளாகவே அமைந்துள்ளன.

பண்டாரவளை கல்பள்ளி முதியோர் காப்பகத்தில் சிரமதானப் பணி முன்னெடுக் கப்பட்டு, மரம் நடுகை வேலைத்திட்டமும், முதியோருக்கு மதிய உணவு வழங்கல், பாவனைப் பொருட்கள் வழங்கல், உலருணவுப் பொதிகள் வழங்கல் ஆகியன இடம்பெற்று, முதியோரை மகிழ்விக்கும் இசை நிகழ்ச்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

ப்ரெண்ட்லி ஷிப் யூத் டியூப் வலைத்தளம் மூலமாக கல்விக் களம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான செயலமர்வுகளும், 10 மற்றும் 11 தரங்களுக்கான பிரதான பாடங்களுக்கான செயலமர்வுகளும் சிறப்பு தேர்ச்சிபெற்ற ஆசிரியர்களினால் யூத் டியூப் அலைவரிசைகள் ஊடாக முன்னெடுக்கப்பட்டன.

கல்வி எனும் கருவியே, எமது சமூகத்தை வளப்படுத்தும் சிறந்த ஆயுதாகும் என்ற வகையில் ஹாலி-எல, சென். ஜேம்ஸ் தமிழ் வித்தியாலய சாதாரண தர மாணவர்களுக்கான கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கான இலவச கல்விக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.

வறிய மாணவர்களுக்கு தேவைப்படும் மூக்குக் கண்ணாடிகளை வைத்திய ஆலோசனைகளின்படி, பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, அவர்களுக்கு மூக்குக்கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

ப்ரெண்ட்லி ஷிப் அமைப்பினால் தொடரவிருக்கும் எதிர்கால வேலைத்திட்டங்களாக கல்வித்துறையில் மேம்பாடு, விளையாட்டுத் துறையை ஊக்குவித்தல், சமூக விழிப்புணர்வுகளை ஏற்படுத்த வீதி நாடகங்களை பரவலாக மேற்கொள்ளல், இரத்த தானம் வழங்க விரும்புபவர்களை ஒன்றுதிரட்டி, வைத்திய நிபுணர்களின் ஆலோசனைகளுக்கேற்ப இரத்த தான நிகழ்வினை நடத்துதல், பிறப்புச் சான்றிதழ்கள் உள்ளிட்ட முக்கிய ஆவணங்கள் இல்லாதவர்களுக்கு, அவற்றினை இலவசமாகவே பெற்றுக்கொடுத்தல், மாணவர்களது தலைமைத்துவ திறன்களை மேம்படுத்தும் நோக்கில், இலவச தலைமைத்துவப் பாசறைகளை மேற்கொள்ளல் உள்ளிட்டு தேவைப்படும் உடன் உதவிகள் ஆகியவற்றை முன்னெடுக்கவுள்ளது.











# வவுனியாவில் ஊரடங்கு நேரத்தில் மதுபானசாலை முன்னால் வாள்வெட்டு



(வவுனியா நிருபர்)

வவுனியா பழைய பஸ் நிலையத்திற்கு அருகாமையிலுள்ள மதுபானசாலைக்கு முன்பாக ஊரடங்கு அமுலில் இருந்த நேரத்தில் நேற்று முன்தினம் (02) மாலை 6.30 மணியளவில் இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதலில் மூவர் காயமடைந்துள்ளனர்.

மதுபானசாலை மூடியதன் பின்னர் மதுபானசாலைக்கு முன்னால் மூவருக்கிடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. இதன்போது ஒரு நபர் தனது மோட்டார்சைக்கிளில் வைத்திருந்த மரம் அறுக்கும் வாள் மூலம் மற்றைய இருவர் மீதும் தாக்குதல் மேற்கொண்டுவிட்டு அவ்விடத்திற்கு செல்ல முற்பட்டபோது மற்றைய இருவரும் இணைந்து அவரின் வாளை பறித்து அவர் மீதும் வாள் மற்றும் கற்களால் தாக்குதல் மேற்கொண்டதுடன் தாக்குதலில் காயமடைந்த நபர் அங்கிருந்து வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு சென்று தஞ்சமடைந்தார்.

அதன் பின்னர் மற்றைய இருவரும் அவ்விடத்திற்கு வாள்களுடன் வெளியேறி சென்றதுடன் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# நாட்டில் அவசரகால சட்டத்தை பிரகடனப்படுத்தி அரசு மீண்டும் தவறிழைத்துள்ளது

## செல்வம் எம்.பி.



(மன்னார் நகர் நிருபர்)

நாட்டில் அவசரகால சட்டத்தை பிரகடனப்படுத்தி இந்த அரசு மீண்டும் தவறிழைத்துள்ளது - என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று முன்தினம் (02) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் அவசரகால சட்டம் ஜனாதிபதியால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. முப்படையினருக்கும் அதிகாரங்கள் வழங்கப்பட்டு ஜனநாயக ரீதியில் போராடுகின்ற மக்களை அடக்க, ஒடுக்க இச்சட்டம் அமுலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்த அரசாங்கம் மேலும் மேலும் தவறிழைத்துக்கொண்டு இருக்கின்றது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உண்மையில் மக்களின் அன்றாடப் பிரச்சினை, மக்கள் அன்றாடம் எதிர்நோக்குகின்ற துன்பங்களை பிரதிபலிக்கும் வகையில் போராட்டங்களை முன்னெடுக்கின்றனர்.

இந்நிலையில், அரசு மீண்டும் தவறிழைக்கின்றது. அவசரகால சட்டத்தை அமுல்படுத்தி மீண்டும் மக்களை அடக்க, ஒடுக்க நினைக்கின்ற முறையை கையாள நினைக்கின்ற செயல்பாட்டை ஜனாதிபதி செய்யத் துணிகின்றார். அதை வன்மையாகக் கண்டிக்கின்றோம். அதனை முழுமையாக வாபஸ் பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

இந்த நாட்டில் மக்களை காப்பாற்ற முடியாத அரசு - இந்த மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்திசெய்ய முடியாத அரசு - நாளாந்தம் மக்கள் படுகின்ற துன்ப துயரங்களை கருத்திற்கொள்ளாத அரசு இந்த அவசரகால சட்டத்தை அமுல்படுத்தி நிம்மதியாக இருந்து விடலாம் என்று நினைத்து விட முடியாது.

மக்கள் கிளர்ந்தெழுந்துள்ளார்கள். இதனூடாக போராட்டங்களை தடுத்து நிறுத்தி விடலாம் என்று நினைத்தால் அது பகல் கனவு. மக்கள் அரசுக்கு எதிராக தற்போது வீதிக்கு இறங்கியுள்ளார்கள்.

மக்களின் போராட்டம் தொடரும். எனவே, ஜனாதிபதியினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அவசரகால சட்டம் மீளப்பெறப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கை. நாட்டில் அவசரகால சட்டத்தை அமுல்படுத்தியமையை வன்மையாக கண்டிக்கின்றோம் – என்றார்.

# மக்கள் சனத்தொகைக்கேற்ப நகரங்களை விரிவுபடுத்தவேண்டிய தேவையுள்ளது

## யாழ். அரச அதிபர் மகேசன்



(சாவகச்சேரி நிருபர்)

மக்கள் சனத்தொகைக்கேற்ப நகரங்களை விரிவுபடுத்த வேண்டிய தேவை ஏற்பட்டிருப்பதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

பல்பரிமாண நகரத் திட்டத்திற்குள் உள்ளீர்க்கப்பட்டு நேற்று முன்தினம் (02) திறந்துவைக்கப்பட்ட சாவகச்சேரி பஸ் நிலைய திறப்புவிழா நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

நூறு நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்திற்கு இரண்டு நகரங்களை அழகுபடுத்தவே முதலில் ஒதுக்கீடு வழங்கப்பட்டது. அதன்பின்னர் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் அங்கஜன் இராமநாதன் மேலும் நான்கு நகரங்களை அபிவிருத்தி செய்வதற்கான கோரிக்கையை முன்வைத்த நிலையில்,ள மொத்தமாக யாழ். மாவட்டத்திற்கு 5 பல்பரிமாண நகரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

சன நெரிசல் நிறைந்த இடமாக யாழ். மாவட்டம் மாறி வருகிறது. அதற்கேற்ப நகரங்களை விரிவுபடுத்தி வசதிகளை மேம்படுத்த வேண்டிய தேவை நிலவுகிறது. அதன் ஓர் அங்கமாகவே இந்த நகரங்கள் அபிவிருத்தி செய்யப்படுகின்றன. பல சவால்களுக்கு மத்தியில் இன்று இந்த அபிவிருத்தித் திட்டங்களை மக்கள் மயப்படுத்தியுள்ளோம். இந்த செயற்றிட்டம் நிச்சயம் மக்களுக்கு பயனுள்ளதாக அமையும்.

சாவகச்சேரி நகரம் மேலும் பல கட்டங்களாக அபிவிருத்தி செய்யப்பட்டு எதிர்காலத்தில் சர்வதேச நியமங்களுக்குரிய நகரமாக மிளிரும் – என்றார்.

# சாவகச்சேரி வைத்தியசாலையில் பல குறைபாடுகள்; நேரடியாக ஆராய்ந்த அங்கஜன் எம்.பி.



(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் பல குறைபாடுகள் காணப்படுவதாக ஊடகங்கள் மற்றும் பொதுமக்கள் வாயிலாக அறிந்த யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுத்தலைவர் அங்கஜன் இராமநாதன் நேற்று முன்தினம் (02) காலை வைத்தியசாலைக்கு நேரடி விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார்.

வைத்தியசாலையில் இரண்டு மின்பிறப்பாக்கிகள் இருந்தும் மின்வெட்டு நேரத்தில் வைத்தியசாலை இருளில் மூழ்கி நோயாளர்கள் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றமை, வைத்தியசாலையின் நோயாளர் விடுதி, மலசலகூடங்கள் மற்றும் வைத்தியசாலை சூழல் துப்புரவின்மை உள்ளிட்ட பல குறைபாடுகளை பார்வையிட்டு அதற்கான தீர்வுகளை வழங்கும் முகமாக நாடாளுமன்ற உறுப்பினர் விஜயம் மேற்கொண்டிருந்தார்.

குறித்த விஜயத்தின்போது யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசனும் உடனிருந்திருந்தார்.

இது தொடர்பாக அங்கஜன் இராமநாதன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

கடந்த வெள்ளிக்கிழமை (01) இரவு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் மின்வெட்டு நேரத்தில் நோயாளர்கள் மின்சாரம் இன்றி பல அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர். நோய் தீவிரமாகி வைத்தியசாலைக்கு வந்தால் இங்கு மின்சாரம் இல்லை என்றால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது. வைத்தியசாலையில் மின்பிறப்பாக்கி ஒன்று 4 வருட காலமாக எந்தவித பராமரிப்புமின்றி காணப்படுகிறது. மக்கள் வரிப்பணத்தை இவ்வாறு வீணடிக்க முடியாது.

இதுதொடர்பாக மாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் கேதீஸ்வரனுடன் பேசி உடனடியாக பராமரிப்பின்றி 4 வருடங்களாக காணப்படும் மின்பிறப்பாக்கியை இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கக் கூறியுள்ளேன். அத்துடன் வைத்தியசாலைக்கு தேவையான துப்புரவு பணியாளர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு பிரதம செயலாளரிடம் இச்சந்தர்ப்பத்தில் தொலைபேசி வாயிலாக தெரிவித்துள்ளேன் – என்றார்.

# ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டபோது...





(மன்னார் நகர் நிருபர்)

நாடளாவிய ரீதியில் ஊரடங்கு சட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை (03) அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில், அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய சேவைகள் அனைத்தும் மன்னார் மாவட்டத்தில் முற்றாக முடக்கப்பட்டன.

உணவகங்கள், வியாபார நிலையங்கள், போக்குவரத்து சேவைகள் அனைத்தும் முற்றாக நிறுத்தப்பட்டுள்ள நிலையில் மக்கள் முற்றாக வீடுகளில் முடங்கியிருந்தனர்.

வீதிகள் மற்றும் பொது பகுதிகளில் பொலிஸார் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதுடன் உரிய அனுமதியின்றி வீதிகளில் நடமாடுவோர் எச்சரிக்கப்பட்டு திருப்பியனுப்பப்பட்டனர்.




(வவுனியா நிருபர்)

நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு சட்டம் காரணமாக வவுனியா நகரம் முழுமையாக முடங்கியுள்ளதுடன், பொலிஸார் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

அரசாங்கத்தினால் நாடு முழுவதும் நேற்று முன்தினம் மாலை 6 மணிமுதல் நேற்றுக் காலை 6 மணிவரை ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

இதனையடுத்து வவுனியா மாவட்டத்தில் வர்த்தக நிலையங்கள், மருந்தகங்கள், உணவகங்கள் என அனைத்து வியாபார நிலையங்களும் பூட்டப்பட்டுள்ளதுடன், வீதிகளும் வெறிச்சோடி காணப்பட்டன.

பொலிஸார், இராணுவத்தினர் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதுடன், வீதியால் செல்லும் வாகனங்கள், மோட்டார்சைக்கிள்களை வழிமறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன், அனுமதியின்றியும், அத்தியாவசிய தேவையின்றியும் பயணிப்பவர்களை எச்சரித்து பொலிஸார் மீள அனுப்பினர்.

# ஹயர்ஸ் – மோட்டார்சைக்கிள் மோதி விபத்து; ஒருவர் படுகாயம்!



(வவுனியா நிருபர்)

வவுனியா - மன்னார் வீதியில் பட்டானிச்சூர் பகுதியில் நேற்று முன்தினம் (02) ஹயர்ஸ் ரக வாகனம் - மோட்டார்சைக்கிள் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வீதியோரத்தில் நின்ற ஹயர்ஸ் ரக வாகனம் பிரதான வீதிக்கு ஏற முற்பட்ட சமயத்தில் மன்னார் வீதியூடாக வவுனியா நகர் நோக்கி பயணித்த மோட்டார்சைக்கிள் ஹயர்ஸ் ரக வாகனத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தில் மோட்டார்சைக்கிளின் சாரதி படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# திடீர் ஊரடங்கால் அத்தியாவசியப் பொருட்களையும் எரிபொருட்களையும் பெற்றுக்கொள்ள மக்கள் வரிசையில்



(மன்னார் நகர் நிருபர்)

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை(02) மாலை 6.00 மணி தொடக்கம் இன்று திங்கட்கிழமை அதிகாலை 6.00 மணி வரை பொது முடக்க நிலை அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் மக்கள் அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் எரிபொருட்களை பெற்றுக்கொள்ள நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

மன்னார் நகர்ப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் மரக்கறி விற்பனை நிலையங்களில் அதிகளவு மக்கள் பொருட்கொள்வனவு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்ற நிலையில், வழமைபோன்று எரிபொருள் பெற்றுக்கொள்வதற்கும் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

06 மணியை கடந்த நிலையிலும் மன்னார் நகர்ப் பகுதியில் பெரும்பாலான வர்த்தக நிலையங்கள் வழமைபோன்று இயங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது.

திகதி 01.04.2022 வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4724
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.13,955,070.00
ஆங்கில எழுத்து B வெற்றி இலக்கங்கள் 1 0 7 1 1 3
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.19,290,420.00

கோடி 23 + Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1072
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.4,532,840.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.245,592,818.00
ENGLISH LETTER T SUPER NUMBER 11 WINNING NUMBERS 24 30 49 62
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : infor@nlb.lk பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 754
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,530,380.00
வெற்றி இலக்கினம் L வெற்றி இலக்கங்கள் 25 59 73 76
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 105,993,813.20

திகதி 02.04.2022 சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4725
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.13,291,430.00
ஆங்கில எழுத்து C வெற்றி இலக்கங்கள் 6 6 8 4 2 6
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.19,344,720.00

கோடி 23 + Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1073
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.4,368,500.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.245,899,018.00
ஆங்கில எழுத்து O சுப்பர் நம்பர் 03 வெற்றி எண்கள் 11 28 39 79
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : infor@nlb.lk பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 755
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,986,340.00
வெற்றி இலக்கினம் M வெற்றி இலக்கங்கள் 35 67 68 80
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 106,230,738.80

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1231
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,317,860.00
வெற்றி இலக்கினம் துலாம் வெற்றி இலக்கங்கள் 2 8 4 7 4 2
அடுத்த சீட்டிழுப்பின சுப்பர் பரிசு ரூ.10,819,852.80

# சமூகத்தை சரியாக வழிநடத்துவதன் அவசியத்தை முஸ்லிம் தலைமைகள் உணரவேண்டும்

**கலாநிதி அன்வர் முஸ்தபா வலியுறுத்து**

(நூருல் ஹுதா உமர்)

"நாட்டின் இன்றைய நிலை எல்லோருக்கும் தெரிந்ததே. இருந்தாலும் நாட்டில் சகல பாகங்களிலும் போராட்டம் நடப்பது நாமறிந்த விடயம். இந்த ராஜபக்ஷ அரசை முஸ்லிம் சமூகத்தில் பெரும்பான்மையானவர்கள் கடந்த 2005 முதல் எதிர்த்து வருகிறார்கள் என்பது வெளிப்படையான உண்மை. இப்படியிருக்க நாட்டில் பெரும்பான்மை இன மக்கள் போராட்டம் நடத்தும்போது அதில் நாம் பங்கெடுப்பதில் எமது சமூகத்திற்கு இருக்கும் ஆபத்தைவிட நாம் தனியாக போராட்டம் நடத்தும்போது இருக்கும் ஆபத்து அதிகம் என்பதை நாம் எல்லோரும் உணர்ந்து கொள்ள முடியும்" - என ஸ்ரீலங்கா ஜனநாயக கட்சியின் தலைவரும், கிழக்கு மாகாண தகவல் தொழில்நுட்பப் பேரவையின் தவிசாளருமான கலாநிதி அன்வர் முஸ்தபா தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைகள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர், தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

எமது நாட்டில் கடந்த காலங்களில் முஸ்லிம் சமூகம் அனுபவித்த கசப்பான சம்பவங்களின் உண்மையான காரணங்களில் முதன்மையானது ராஜபக்ஷ எதிர்ப்பு வாதம் என்பதை அறியாதவர்களல்ல நாம். இலங்கை தேசத்தின் வளர்ச்சியில் பாரிய பங்காற்றிய முஸ்லிம் சமூகம் நசுக்கப்படும் சமூகமாக கடந்த காலங்களிலிருந்து வந்தமைக்கான காரணம் எமது தலைமைகளின் பிழையான தீர்மானங்களே என்பதை கசப்பாக



இருந்தாலும் ஏற்றுக்கொள்ளவேண்டியது காலத்தின் கட்டாயம்.

முஸ்லிம் சமூகத்தின் குரல்வளைகள் நசுக்கப்பட்டபோது, முஸ்லிம் ஜனாஸாக்கள் எரிக்கப்பட்டபோது, புனித பள்ளிவாசல்களில் நாய்கள் மோப்பம் பிடிக்க அழைத்துவரப்பட்ட போது, அப்பாவி இளைஞர்கள் வீண்பழி சுமந்த போது, முஸ்லிம்களின் சட்டங்களில் அதிகாரம் பாய்ந்தபோது அமைதிகாத்த எமது தலைமைகள் இப்போது நாட்டின் தேசிய பிரச்சினைகளுக்கு தனி அடையாளம் கொடுத்து தனியே முஸ்லிம்கள் பாதிக்கப்படும் பிரச்சினைகள் போன்று விம்பத்தை உருவாக்கி தனி முஸ்லிம்களின் போராட்டத்தை முன்னெடுப்பது இலங்கையில் வாழும் எதிர்கால முஸ்லிம் சந்ததிகளுக்கு ஆபத்தாக அமையும் என்பதை கடந்த கால வரலாறுகள் தெளிவாக எமக்கு எடுத்து காட்டியுள்ளன.

நாட்டின் மேம்பாட்டுக்காக இலங்கையர்களாக ஒன்றிணைந்து பிராத்திக்கவேண்டிய நேரத்தில் நாம் பேரணிக்காக தயாராவது பிழையான தீர்மானமாக அமைந்துள்ளது. என்னுடைய கருத்துகளுக்கு எதிர்காலத்தை கவனத்திற்கொள்ளாது கண்களை மூடிக்கொண்டு மனதில் பட்டதையெல்லாம் எழுதி தள்ளுவார்கள் என்பதை நன்றாக அறிந்தும் எமது சமூகத்தின் எதிர்கால நலனுக்காக இந்தக் கருத்தை முன்வைத்துள்ளேன்.

சரியான நேரத்தில் எடுக்கப்படும் பிழையான முடிவும், பிழையான நேரத்தில் எடுக்கப்படும் சரியான முடிவும் ஆபத்தை தரவல்லதாக அமைந்துவிடும் என்பதை கவனத்திற்கொண்டு முஸ்லிம் தலைமைகள் சமூகத்தை சரியாக வழிநடத்தவேண்டிய தேவை இருப்பதை உணர்ந்து நடக்க வேண்டும். நமது விரல்களை கொண்டு நாம் குத்திக்கொண்டு பின்நாட்களில் அழ முடியாது என்பதை எமது முஸ்லிம் சமூகம் சிந்தித்து நடக்க வேண்டும்.

இப்போது ஆட்சியை பிடிக்க வரிந்து கட்டிக்கொண்டு வீதிக்கு வந்தவர்கள் கடந்த பொழுதுகளில் முஸ்லிம் சமூகம் நசுக்கப்பட்ட போது எவ்வாறு அமைதியாக இருந்து வேடிக்கை பார்த்தார்களோ அப்படி முஸ்லிம் சமூகமும் இப்போது வேடிக்கை பார்க்கவேண்டியதே காலத்தின் தேவையாக அமைந்துள்ளது - என்றார்.

# சாய்ந்தமருது மூதாட்டி கொலை விவகாரம்; சந்தேகநபர் மட்டக்களப்பில் கைது

(பாறுக் ஷிஹான், மாளிகைக்காடு நிருபர்)

அம்பாறை, சாய்ந்தமருது பகுதியில் கடந்த ஜனவரி மாதம் மூதாட்டி ஒருவர் கொலைசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் தலைமறைவாகி மட்டக்களப்பு பிரதேசத்திலுள்ள விடுதியொன்றில் தங்கியிருந்த சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டார்.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பகுதி புதுப்பள்ளி வீதியிலுள்ள வீடொன்றில் தனித்திருந்த சுலைமான் செய்யது புஹாரி (வயது -83) என்ற மூதாட்டி கடந்த ஜனவரி மாதம் கொலைசெய்யப்பட்டிருந்தார்.

இவ்வாறு கொலைசெய்யப்பட்ட மூதாட்டி வசம் இருந்த தங்க ஆபரணங்கள் கொலையாளியினால் அபகரிக்கப்பட்டிருந்ததுடன், கொலை சந்தேக நபர் கொலை செய்துவிட்டு தலைமறைவாகி இருந்த நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு சந்தேகநபரை தேடி வந்தனர்.

இந்நிலையில், நேற்று முந்தினம் (02) மாலை மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் புலனாய்வு உத்தியோகத்தரின் தகவல் ஒன்றிற்கமைய மட்டக்களப்பு விடுதி ஒன்றில் குடும்பத்துடன் தங்கி வாழ்ந்த கொலைச் சந்தேகநபர் கைதானார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் தற்போது அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து செல்லப்பட்டு விசாரணைக்காக தற்காலிகமாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

மேலும் சந்தேகநபர் 48 வயது மதிக்கத் தக்கவர் எனவும் கல்முனை பகுதியினை வசிப்பிடமாகக்கொண்டிருந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் எஸ்.எல்.சம்சுதீன் தலைமையிலான பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன், குறித்த கொலைச் சம்பவம் மூதாட்டியிடம் இருந்த நகைகளை அபகரிக்கும் நோக்கில் நடந்திருக்கலாம் என அடிப்படை விசாரணைகளிலிருந்து வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அவசரகால நிலை பிரகடனப்படுத்தியதையும் மீறி அரசுக்கு எதிராக மக்கள் திருமலையில் ஆர்ப்பாட்டம்



(ரவ்பீக் பாயிஸ்)

நாட்டில் நேற்று முந்தினம் நள்ளிரவுமுதல் அவசரகால நிலை பிரகடனப்படுத்தியதையடுத்து பொலிஸாரின் தடைகளையும் மீறி திருகோணமலையில் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

குறித்த ஆர்ப்பாட்டமானது நேற்று முந்தினம் (02) திருகோணமலையில் அமைந்துள்ள சுப்ரா பூங்காவிற்கு முன்னால் முன்னெடுக்கப்பட்டிருந்தது

திருகோணமலை தலைமையகப் பொலிஸாரினால் குறித்த ஆர்ப்பாட்டத்தை நடத்துவதற்கு அனுமதி மறுக்கப்பட்டதையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்களினால் அமைதியான முறையில் தமது கருத்துகளை தெரிவிக்க அனுமதி கோரி அதனையடுத்து அமைதியான முறையில் குறித்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர்

நாட்டில் நாளுக்கு நாள் அதிகரித்துவரும் விலைவாசி மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கான தட்டுப்பாடு என்பவற்றினை மையமாகக்கொண்டு குறித்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டம் மக்களின் குரல் எனும் தொனிப்பொருளில் திருகோணமலை மக்கள் அமைப்பினர் குறித்த ஆர்ப்பாட்டத்தினை ஏற்பாடுசெய்து ஊடகங்களுக்கு இவ்வாறு கருத்து தெரிவித்தனர்.

நாட்டில் நாளுக்கு நாள் பொருளாதார நிலைமை மிகவும் மோசமான நிலையில் உருவெடுத்து வருகின்ற நிலையில், நாட்டில் பெரும்பாலான பிரதேசங்களில் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுத்து





வருகின்ற இந்தச் சூழ்நிலையில் இவ்வரசு ஏற்கனவே அவசரகால சட்டம் நடைமுறையில் இருக்கும்போது அவசரநிலைப் பிரகடனத்தை ஜனாதிபதி விசேட வர்த்தமானி மூலம் அமுல்படுத்தப்பட்டுள்ளமை இவ்வரசின் சர்வாதிகார போக்கை வெளிக்காட்டியுள்ளதாகவும் இலங்கைவாழ் மக்களின் அடிப்படை மனித உரிமை மீறல் எனவும் தமது பேச்சு சுதந்திரம் தமக்கு இழைக்கப்படும் அநீதி தொடர்பில் குரல் கொடுக்கும் சந்தர்ப்பத்தில் இவ்வாறான ஒரு அவசர நிலை பிரகடனப்படுத்தியமையானது வன்மையாக கண்டிக்கத்தக்க விடயம் எனவும் இதன்போது தெரிவித்தனர்.

மேலும் நாட்டின் அரசியல்வாதிகளின் பிள்ளைகள் வெளிநாடுகளில் அதி சொகுசு வாழ்க்கை வாழ்ந்து வரும் நிலையில் நாட்டில் பொருளாதார நிலை இவ்வாறு காணப்படும் சூழ்நிலையில் தமது நாட்டு மக்களை சிந்திக்காது இவ்வாறு அரசாங்கம் செயற்படுகின்றது. எனவே, பெண்கள் அமைப்பு என்றவகையில் இவ்வாறான செயற்பாடுகளை தாங்கள் கண்டிப்பதாகவும் இதன்போது சுட்டிக்காட்டினர்.

# அம்பாறையில் நடந்த மு.காவின் எழுச்சிப் பேரணி; பெருந்திரளான மக்கள் பங்கெடுப்பு!





(நூருல் ஹுதா உமர்)

நாட்டின் இன்றைய சூழ்நிலையில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ளும் இலங்கையர்களின் பிரச்சினைகளை தீர்க்குமாறு வலியுறுத்தி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினால் ஏற்பாடுசெய்யப்பட்ட பேரணி கடந்த வெள்ளிக்கிழமை (1) மாலை அம்பாறை மாவட்ட அட்டாளைச்சேனை மீனோடைக்கட்டு சந்தியிலிருந்து ஆரம்பித்து அட்டாளைச்சேனை நகரப்பகுதி வரை ஊர்வலமாக சென்றது.

சுமார் பல்லாயிரக்கணக்கான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகர்கள், உயர்பீட உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் குறித்த போராட்டத்தில் கலந்துகொண்டு பல்வேறு கோஷங்களை எழுப்பியதுடன், பல்வேறு சுலோகங்களை தாங்கிச் சென்றதை காணமுடிந்தது.

மேலும் இப்போராட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் பிரதான பேச்சாளாராக கலந்துகொண்டு உரையாற்றினார். மேலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் விசேட பேச்சாளராக கலந்து கொண்டார்.


இந்தப் பேரணியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் நிஸாம் காரியப்பர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம்.மன்சூர், கிழக்கு மாகாண சபை முன்னாள் அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை, கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஏ.எல்.தவம், கல்முனை மாநகர முதல்வர் சட்டத்தரணி ஏ.எம்.றகீப், கல்முனை மாநகர பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர், கல்முனை மாநகர சபை முன்னாள் முதல்வர் கலாநிதி சிராஸ் மீராசாஹிப், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதிப் பொருளாளர் ஏ.சி.யஹியாகான் உள்ளிட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.


## போழியார் புலம்பல்!



***ஜனாதிபதி தலைமையிலான அநுராதபுரத்தில் பௌத்த தாம்போதியல் இடம்பெறும் புத்தரிசி விழாவுக்கு மட்டக்களப்பில் இருந்து 650,கிலோ அரிசியை அனுப்பிய கமநல அபிவிருத்தி திணைக்கள ஆக்கள பார்த்து அழுவதா சிரிப்பதா எண்டு தெரியல்ல அடேய் மட்டக்களப்பில ஒரு வேள கஞ்சிக்கு வழியில்லாம வறுமையில தவிக்கிற சனம் ஆயிரக்கணக்கில இருக்கு எலுவா அதுகளுக்கு கொடுக்காம ஜனாதிபதிய காக்கா புடிக்க அந்த நானா செய்த காரியம் அவருக்குமட்டும் பதவி உயர்வு வரும் .. வேறு என்ன லாபம்..?மட்டக்களப்பான மடையனாக மாத்திற இப்படியான சில போக்கிலி வேலைகளுதான்டா..***

# கிழக்கில் ஊரடங்குச் சட்டம் முழுமையாக அமுல்!





(ரீ.எல்.ஜவ்பர்கான்)

கிழக்கு மாகாணத்தில் நாடு தழுவிய ஊரடங்குச் சட்டம் நேற்று (03) முழுமையாக அமுல் படுத்தப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு மாவட்டம் ஊரடங்குச் சட்டம் காரணமாக இயல்பு வாழ்க்கையை முற்றாக இழந்துள்ளது.நகரங்கள் வெறிஞ்சோடிக் காணப்படுகின்றன.வாகனங்களின்றி பிரதான வீதிகள் அமைதியுடன் காணப்படுகின்றது.வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டுள்ளன.

இராணுவமும் பொலிசாரும் நகரங்களில் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளதுடன் சோதனை நடவடிக்கைகளையும் தீவிப்படுத்தியுள்ளனர்.

# அக்போபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி விபத்தில் பலி!

(கந்தளாய் நிருபர் )



திருகோணமலை - கண்டி பிரதான வீதியில் ரிப்பர் வாகனமொன்றும், காரொன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் காரில் பயணித்த அக்போபுர பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி முதியான்சாலாகே குணதிலக்க பண்டார யகம்பத் (வயது 48) உயிரிழந்துள்ளதாக ஹதரஸ் கொட்டுவ பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்துச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றுளதாக பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ரிப்பர் ரக வாகனமும், காரும் மோதியே இவ்விபத்துச் சம்பவம் நிகழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கண்டியிலிருந்து கந்தளாய் பகுதிக்குச் சென்ற காரும் கந்தளாயிலிருந்து ஹபரனைக்குச் சென்ற ரிப்பர் ரக வாகனமுமே இவ்வாறு விபத்துத்துக்குள்ளாகியுள்ளன.

விடுமுறையில் சென்று மீண்டும் கடமைக்கு திரும்பி வந்துகொண்டிருந்தபோதே அக்போபுர பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளார். ரிப்பர் வாகனத்தின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# வாகரை சிறுமி மர்மமான முறையில் உயிரிழப்பு; சகோதரியின் கணவர் பொலிஸாரால் கைது

(கனகராசா சரவணன் )

மட்டக்களப்பு வாகரை பொலிஸ் பிரிவிலுள்ள பனிச்சங்கேணி பிரதேசத்தில் 18 வயதுடைய சிறுமி மர்மமாக உயிரிழந்த நிலையில், சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக சிறுமியின் சகோதரியின் கணவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக வாகரை பொலிஸார் தெரிவித்தனர்.

பனிச்சங்கேணி பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயதுடைய யோகராசா திரிஷா என்பவர் கடந்த 29ஆம் திகதி இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளர்.

குறித்த பிரதேசத்திலுள்ள சிறுமியின் தாய், தந்தையர் பிரிந்து வாழ்ந்துவரும் நிலையில், தாயார் வேலைவாய்ப்பை பெற்று வெளிநாடு சென்றுள்ளார். இந்நிலையில் குறித்த சிறுமி திருமணமான தனது இரண்டாவது சகோதரியின் பாதுகாப்பில் கல்வி கற்று வந்துள்ளார்.

இந்த நிலையில் சம்பவதினமான கடந்த 28ஆம் திகதி மாலை 7 மணியளவில் சிறுமியை படிக்குமாறு சிறுமியின் சகோதரி தெரிவித்துவிட்டு தனது கணவனுடன் அந்த பிரதேசத்திலுள்ள தனது மூத்த சகோதரியின் வீட்டிற்கு பட்டா ரக வாகனத்தில் அவரிள் கணவர் ஏற்றிக்கொண்டு சென்று விட்டுவிட்டு, மனைவியிடம் மீன்பிடிக்க கடலுக்கு செல்வதாக தெரிவித்துவிட்டு அங்கிருந்து மீண்டும் தனது வீட்டிற்கு திரும்பியுள்ளார். இதனையடுத்து வீட்டில் தனிமையிலிருந்து படித்துக்கொண்டிருந்த சிறுமி தன்னையும் தனது சகோதரியான மூத்த அக்கா வீட்டில் கொண்டு சென்றுவிடுமாறு தெரிவித்த நிலையில் 7.30 மணியளவில் சிறுமியை அதே வாகனத்தில் ஏற்றிக்கொண்டு சென்று சுமார் 5 நிமிடத்தில் மீண்டும் சிறுமியை சடலமாக வாகனத்தில் வீட்டுக்கு கொண்டுவந்துள்ளார்.

இவ்வாறு சடலமாக கொண்டுவந்த சிறுமியின் ஆடைகளிலும் தனது ஆடைகளிலும் இரத்த கறை இருப்பதை கண்டு ஆடைகளை கழற்றி வேறு ஆடைகளை அணிவித்து அறையிலுள்ள கட்டிலில் நித்திரையில் இருப்பதாக சடலத்தை ஒழுங்குபடுத்திவிட்டு மின்விசிறியை இயங்கவைத்துவிட்டு இரத்தக்கறையுடன் கழற்றப்பட்ட தனதும் மற்றும் உயிரிழந்த சிறுமியின் ஆடைகளை ஒரு கலன் ஒன்றில் வைத்து அதனை ஒளித்துவைத்துள்ளார்.

அதனை தொடர்ந்து வீட்டில் பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி கெமராவின் வண்தட்டை (காட்டிஸை) கழற்றி அதனை ஒளித்துவைத்துவிட்டு இரவு 11 மணியளவில் மனைவியை கொண்டு சென்று விட்டுவிட்டுவந்த மனைவியின் சகோதரி வீட்டிற்கு சென்று மனைவியை அங்கிருந்து கூட்டிக்கொண்டு வீடு திரும்பிய நிலையில் சிறுமி நித்திரையில் இருப்பதாக மனைவியிடம் தெரிவித்து அவரை எழுப்பவேண்டாம் என தெரிவித்துவிட்டு கணவன் மனைவியுடன் தமது அறையில் நித்திரைக்கு சென்றுள்ளார்.

இதன் பின்னர் அடுத்த நாள் 29ஆம் திகதி காலையில் சிறுமி அறையிலிருந்து வெளிவராத நிலையில் அறைக்கு சென்று சிறுமியை எழுப்ப முற்பட்டபோது சிறுமியின் வாயால் நுரையும் இரத்தமும் வெளியேறியதை கண்டு உடனடியாக பொலிஸாருக்கு அறிவித்தனர் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது

குறித்த சடலத்தை பார்வையிட்ட பொலிஸார் நீதிமன்ற அனுமதியை பெற்று பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சடலத்தை ஒப்படைத்தனர். இதனை தொடர்ந்து கடந்த வியாழக்கிழமை பிரேத பரிசோதனையை மேற்கொண்ட சட்டவைத்திய அதிகாரி குறித்த சிறுமியின் தலையிலும் முதுகு பகுதியிலும் தாக்குதல் இருப்பதாகவும் இதன் காரணமாகவே சிறுமி உயிரிழந்துள்ளதாக அறிக்கை ஒன்றை பொலிஸாருக்கு வழங்கியதையடுத்து குறித்த சிறுமியின் 28 வயதுடைய அத்தானை கைதுசெய்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாகரை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். இதேவேளை, மறைத்துவைக்கப்பட்டிருந்த வண்தட்டை (காட்டிஸ்) மீட்டுள்ள பொலிஸார் களனி பொலிஸ் பிரிவினரின் அந்த காட்டிஸை சோதனையிட்டபோது அதில் முதலில் மனைவியை ஏற்றிச் செல்வதும் பின்னர் குறித்த சிறுமியை ஏற்றிச் சென்று சுமார் 5 நிமிடத்தில் திரும்ப சிறுமியை சடலமாக கொண்டுவருவதும் வீடியோ காட்சிகளில் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# மண்டூரில் பெண்ணொருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்பு!

(கல்லடி நிருபர்)

வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மண்டூர் பாலமுனைப் பிரதேசத்தில் தீபன் ஹம்சாயினி (வயது - 18) என்ற மாணவி தூக்கில் தொங்கிய நிலையில் கடந்த முதலாம் திகதி சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

குறித்த மாணவி தனது குடும்பத்தினருடன் உறவினரொருவரின் வீட்டுக்குச் சென்று திரும்பிய நிலையில் க.பொ.த. (சாதாரணதரப்) பரீட்சை அண்மித்துள்ளதால் படிக்குமாறு தாயார் அவரிடம் கூறியுள்ளார். இந்நிலையில் இம்மாணவி அறைக்குள் சென்று படித்துள்ளார். நேரமாகியும் அவர் வெளியே வராததால் அறைக்கதவை அவரின் சகோதரன் உடைத்து உள்ளே சென்று பார்த்தபோது குறித்த மாணவி தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.

களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிமன்ற பதில் நீதவான் ஏ.எல்.முனாஸின் உத்தரவுக்கமைய சம்பவ இடத்திற்குச் சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தைச் சென்று பார்வையிட்டதுடன், சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தும் பொருட்டு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லுமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# திறமைமிக்க மாணவர்கள் பாராட்டி கௌரவிப்பு





(அட்டாளைச்சேனை நிருபர்)

அக்கரைப்பற்று தேசிய பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்கள் மத்தியில் நடைபெற்ற பரீட்சைகளில் திறமை காட்டிய மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் வகையில் ஏற்பாடுசெய்யப்பட்ட வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த வாரம் கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றது.

அதிபர் ஏ.பி.முஜீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தின் சிறுவர் பெண்கள் பிரிவு பொறுப்பதிகாரி உதவி பொலிஸ் பரிசோதகர் எம்.எல்.லரீப், மக்கள் சமூக நலன் பிரிவு உத்தியோகத்தர் பொலிஸ் சார்ஜன் ராஜசிங்கம், பாடவிதான பிரதி அதிபர் எஸ்.எம்.எம்.ஜாபீர் உள்ளிட்ட துறைசார் முக்கியஸ்தர்கள் அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

இப்பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களிடையே நடைபெற்ற ஆண்டிறுதிப் பரீட்சையில் திறமை காட்டிய தரம்-06 முதல் தரம்-13 வரையான மாணவர்கள் பாராட்டி சான்றிதழ்கள், நினைவுச்சின்னங்கள் மற்றும் பணப்பரிசில்கள் போன்றன வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

பாடசாலை மட்ட பரீட்சைகள், இணைப்பாடவிதானச் செயற்பாடுகள், மாகாண மற்றும் தேசியமட்டப் போட்டிகளில் சாதனை படைத்த மாணவர்கள் போன்றோர் இதன்போது பாராட்டி பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்பட்டதுடன், மாணவர்களை கல்விச் செயற்பாடுகள் மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகள் போன்றவற்றில் அதீத ஈடுபாடு காட்டி ஊக்குவித்து செயற்படும்வண்ணம் பணப்பரிசில்கள் உள்ளிட்ட பல்வேறான கௌரவிப்புகள் இதன்போது மாணவர் திறமையாளர்களுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பிரதேச கலாசார அதிகாரசபையின் புதிய நிர்வாகத் தெரிவு - விருதுகள் தொடர்பில் விசேட கலந்துரையாடல்







(மூதூர் நிருபர்)

மூதூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பிரதேச கலாசார அதிகாரசபையின் புதிய நிர்வாகத் தெரிவும் விருதுகள் தொடர்பான கலந்துரையாடலும் கடந்த வெள்ளிக்கிழமை (01) மூதூர் உப பிரதேச செயலாளர் எஸ். நிருபா தலைமையில் பிரதேச செயலக ஒன்று கூடல் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலாசார உத்தியோகத்தர் க.அன்பழகன், அபிவிருத்தி உத்தியோகத்தர் களான திருமதி லலிதாதேவி, திருமதி சுபாஜினியும் கலந்து கொண்டதோடு,

நாற்பதுக்கும் மேற்பட்ட மூதூர் பிரதேச கலைஞர்கள் கலந்துகொண்டனர்.

தெரிவுசெய்யப்பட்ட இரண்டு கலைஞர்களுக்கு இதன்போது உலருணவுப் பொதிகளும் வழங்கப் பட்டன.

மூதூர் பிரதேச கலாசார அதிகாரசபையின் புதிய நிர்வாகத்தின் தலைவராக மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம்.முபாறக், செயலாளராக ஓய்வுபெற்ற பிரதேச செயலாளர் எம்.சி.எம்.ஷெரீப் தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# திருமலை திவுல்கஸ்வெவவை அண்டிய யாய அணைக்கட்டின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பம்





(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை கோமரங்கடவெல பகுதியில் அமைந்துள்ள திவுல்கஸ்வெவவை அண்டிய யாய அணைக்கட்டை புனரமைக்கும் பணிகள் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவருமான கபில அத்துக்கோரலவினால் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்துவைக்கப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர் அண்மையில் கோமரங்கடவெல பகுதிக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது விவசாய அமைப்புகள் ஒன்றிணைந்து விடுத்த கோரிக்கைக்கமைவாக யாய அணைக்கட்டு புனரமைக்கப்படுகின்றது.

கோமரங்கடவெல பகுதியில் யாய குளத்து நீரைப் பயன்படுத்தி பெருமளவிலான விவசாய குடும்பங்கள் நன்மையடைந்துவருவதோடு இப்பகுதியில் சிறந்த விளைச்சலும் கிடைக்கின்றன.

விவசாயிகள் யாய அணைக்கட்டினை புனரமைப்பதன் மூலம் திவுல்கஸ்யாய விவசாயிகள் இடையூறின்றி தமது விவசாய செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல முடியும்.





கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பூவரசன்தீவு கிராமசேவகர் பிரிவில் வறுமைக்கோட்டின்கீழ் வாழும் மக்களுக்கு ரமழான் மாத உலருணவுப் பொதிகள் கடந்த வாரம் வழங்கப்பட்டன. அல்-ஹிக்மா பவுண்டேஷன் அனுசரணையுடன் கிண்ணியா பிரதேச செயலாளர் ஆர். முஹம்மது கனி இதனை வழங்கினார். (படங்கள் - சீனக்குடா நிருபர்)

# சிறியளவான தொழிலாளர்களை ஊக்குவிக்கும் வேலைத்திட்டம்





(மாவடிப்பள்ளி நிருபர்)

கிராமத்துடனான கலந்துரையாடல் வேலைத்திட்டத்தின்கீழ் சாய்ந்தமருது பிரதேசத்தில் தெரிவுசெய்யப்பட்டுள்ள பயனாளிகள் சிலருக்கான காசோலைகள் மற்றும் கோழிக்குஞ்சுகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இத்திட்டத்தின் கீழ் கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாகத் தெரிவுசெய்யப்பட்ட சிலருக்கான வீடு புனரமைப்பு வேலைகளுக்கான முதலாம் கட்ட காசோலைகள் வழங்கப்பட்டதோடு வாழ்வாதாரத் திட்டத்தின்கீழ் தெரிவுசெய்யப்பட்டோருக்கான கோழிக்குஞ்சுகளும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஐ.முவப்பிகா, திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் கே.எல்.ஏ.ஹமீட், கணக்காளர் நுஸ்ரத் பானு, நிதி உதவியாளர் ஏ.சி.முஹம்மட் உட்பட உத்தியோகத்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# நோன்பு கால விடுமுறையை நீடிக்க கோரிக்கை

(சீனக்குடா நிருபர்)

அட்டாளைச்சேனை, தர்கா டவுன் கல்விக் கல்லூரிகளுக்கு இதுவரைகாலமும் வழங்கப்பட்டு வந்த நோன்பு கால விடுமுறையைத் தொடர்ந்து வழங்க நடவடிக்கை எடுக்குமாறு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் கல்வி அமைச்சர் தினேஸ் குணவர்தனவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அமைச்சருக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாட்டிலுள்ள சகல கல்விக் கல்லூரிகளினதும் தற்போதைய தவணை இம்மாதம் 8ஆம் திகதி முடிவுறுத்தப்பட்டு அடுத்த தவணை இம்மாதம் 18ஆம் திகதி ஆரம்பிக்கப்பட வேண்டுமென கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்விப் பிரிவுகக்கான பிரதம ஆணையாளர் சகல கல்விக்கல்லூரிகளுக்கும் கடிதம் அனுப்பியுள்ளார்.

இதன்படி முஸ்லிம் பாடசாலைகள் இம்மாதம் முதலாம் திகதி முதலாம் தவணைக்காகவும், நோன்புக்காகவும் மூடப்பட்டு அடுத்த மாதம் முற்பகுதியில் மீள ஆரம்பிக்கப்படும். ஆனால், இந்த நடைமுறை பிரதம ஆணையாளரின் கடிதப்படி அட்டாளைச்சேனை, தர்கா டவுன் கல்விக் கல்லூரிகளுக்கு இம்முறை மறுக்கப்பட்டுள்ளது.

இவ்விரு கல்விக் கல்லூரிகளும் ஆரம்பிக்கப் பட்டதுமுதல் முஸ்லிம் பாடசாலை தவணைகளின் அடிப்படையிலேயே செயற்பட அனுமதிக்கப்பட்டு வந்தன. இம்முறை இந்த அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தமது கலாசார அடிப்படையில் செயற்பட இருந்து வந்த உரிமை இக்கல்விக் கல்லூரிகளுக்கு மறுக்கப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவன் கௌரவிப்பு



(கந்தளாய் நிருபர்)

தம்பலகாமம் பிரதேச செயலக ஏற்பாட்டில் இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் ஊடாக தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த தி/குளக்கோட்டன் தமிழ் வித்தியாலய மாணவன் மோகனதாஸ் வருணிதனை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் குறித்த மாணவனுக்கு பயனாளி நலன் காசோலையாக 5000 ரூபா வழங்கப்பட்டது.

குறித்த காசோலையினை திருகோணமலை மறை மாவட்ட ஆயர் பேரட்திரு கலாநிதி நோயல் இமானுவேல் வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் 'சுரக்கும்' திட்டத்தில் தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் முதற் தடவையாக முழுமையான தொகையை செலுத்திய அங்கத்தவராக இணைந்தவரை பாராட்டும் முகமாக தவணைப் பணம் செலுத்தும் புத்தகமும் பிரதேச செயலாளரால் இதன்போது வழங்கப்பட்டன.

சமூக பாதுகாப்பு சபையில் அங்கத்துவம் கொண்ட மாணவர்கள் ஐந்தாம் தர புலமைப்பரிசில் சித்திக்கு ஐயாயிரம் ரூபா கொடுப்பனவும் க.பொ.த. சாதாரண தர சித்திக்கு 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவும் பல்கலைக்கழக தெரிவுக்கு 20 ஆயிரம் ரூபா கொடுப்பனவும் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதில் உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், சமூக சேவை உத்தியோகத்தர் பி.சுதன், சமூக பாதுகாப்பு சபையின் மாவட்ட இணைப்பாளர் பா.சஜீகா, பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் தங்கரூபன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# அங்கவீனமுற்ற - வறுமைக்கோட்டுக்குக்கீழ் வசிக்கும் மக்களுக்கு உலருணவுகள் வழங்கிவைப்பு






(மாளிகைக்காடு நிருபர்)

பாதைகள், மின்சார வசதிகள், குடிநீர் இணைப்புகள் உட்பட எவ்வித அடிப்படை வசதிகளுமற்ற மிகப் பின்தங்கிய அம்பாறை வீரகெட பிரதேசத்தில் வசிக்கும் மக்களின் குறைகளை ஆராயும் விஜயமும், அங்கவீனமுற்ற மற்றும் வறுமைக்கோட்டுக்கு கீழ் வசிக்கும் மக்களுக்கு உலருணவுகள் வழங்கும் நிகழ்வும் கடந்த வாரம் கல்முனை மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜனின் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

கல்முனை சுமத்திராராம விகாரையின் விகாராதிபதி ரண்முத்துக்கல சங்கரத்ன தேரரின் வேண்டுகோளின்பேரில் வீரகெட பிரதேசத்தில் வசிக்கும் மக்களுக்கு வழங்கப்பட்ட உலருணவுப் பொதிகளுக்கான நன்கொடையை சுவிஸ்லாந்தில் வசிக்கும் சமூக சேவகி ஒருவர் வழங்கியிருந்தார்.

தொடர்ந்தும் பல வருடங்களாக பல்வேறு சமூக சேவைகளை செய்துவரும் குறித்த சமூக சேவகி, இந்த பொருட்களை தங்களுக்கு கொண்டுசேர்க்க உதவிய கல்முனை சுமத்திராரம விகாரையின் விகாராதிபதி ரண்முத்துக்கல சங்கரத்ன தேரர், கல்முனை மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் உட்பட நிவாரணக் குழுவினருக்கு இன, பிரதேச பாகுபாடுகளின்றி எங்களை தேர்ந்தெடுத்து இந்த உதவிகளை செய்தமைக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்வதாக வீரகெட பிரதேச மக்கள் இதன்போது தெரிவித்தனர்.

இந்த விஜயத்தில் இந்நிவாரணப் பணிக்கான உதவிகளை செய்த சமூக சேவகியின் புதல்வர், மீஸான் பௌண்டஷன் தவிசாளர் நூருல் ஹுதா உமர் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

# எழுத்தாளர்களின் கௌரவிப்பும் நூல் வெளியீட்டு நிகழ்வும்







(மூதூர் நிருபர்)

மூதூர் பிரதேசத்திலுள்ள எழுத்தாளர்களின் கௌரவிப்பும், சாகரம் எனும் நூல் வெளியீட்டு விழாவும் கடந்த வாரம் சம்பூர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. இதனை மூதூர் பிரதேச சபை ஏற்பாடு செய்திருந்தது.

மூதூர் பிரதேச சபையின் தவிசாளர் எம்.எம்.எ.ஏ.அரூஸ் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றதோடு, இதற்கான அனுசரணையை இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனம் வழங்கியிருந்தது.

இதில் மூத்த எழுத்தாளர்கள் 22 பேரும், இளம் எழுத்தாளர்கள் 15 பேருமாக மொத்தம் 37 எழுத்தாளர்கள் நினைவுச்சின்னம், பொற்கிழி என்பன வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இதன் போது கலைநிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தன.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என்.மணிவண்ணண், கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் மொழித்துறைத் தலைவர் பேராசிரியர் செ.யோகராசா, மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர் முனவ்வறா நளீம், மூதூர் பிரதேச செயலாளர் எம்.பீ.எம்.முபாறக் உள்ளிட்ட பலரும் அதிதிகளாக கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது .

# உக்ரைனிலிருந்து 40 இலட்சம் பொதுமக்கள் வெளியேற்றம்



ரஷ்யாவின் தாக்குதல் காரணமாக உக்ரைனில் இருந்து 40 இலட்சம் பேர் வரை வெளியேறியிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. அவர்களில் பெரும்பாலானோர் நம்பிக்கையற்ற நிலையில் இருப்பதாகவும் அவ்வமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

உக்ரைன் மீது ரஷ்யா போரை நடத்தும் என கடந்த ஆண்டு இறுதியில் இருந்தே பேசப்பட்டு வந்தது. இந்த நிலையில் கடந்த பெப்ரவரி மாதம் ரஷ்யப் படைகள் உக்ரைன் மீது தாக்குதல் நடத்த தொடங்கின. இதற்கு முன்பிருந்தே ரஷ்ய எல்லையை ஒட்டியுள்ள மக்கள் வெளியேறத் தொடங்கி விட்டனர்.

உக்ரைன் மீது ரஷ்யா போரைத் தொடங்கி ஒரு மாதத்திற்கு மேல் ஆகியுள்ள நிலையில், உக்ரைன் தற்போது ஒவ்வொரு பகுதிகளாக இழந்து வருகிறது. உக்ரைனில் இருந்து வரும் தகவலின்படி, ரஷ்யப் படைகள் உக்ரைனை விட அதிக இழப்பை சந்தித்துள்ளன. இருப்பினும், இதுகுறித்து ரஷ்ய தரப்பில் அதிகாரபூர்வ அறிவிப்பு ஏதும் வெளியிடப்படவில்லை.

இந்த நிலையில், போர் காரணமாக உக்ரைனை சேர்ந்த சுமார் 40 இலட்சம் பேர் வெளியேறியுள்ளதாக ஐ.நா. தெரிவித்துள்ளது. நாள் ஒன்றுக்கு சுமார் 40 ஆயிரம் பேர் வரையில் உக்ரைனில் இருந்து வெளியேறி வருவதாக ஐ.நா. கூறியுள்ளது.

இதுதொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் பேச்சாளர் ஒருவர் கூறுகையில், இரண்டாம் உலகப் போருக்கு பின்னர் இதுவரை இல்லாத அளவில் உக்ரைனில் இருந்து மக்கள் வெளியேறி வருகின்றனர். அவர்களுக்கு போதுமான உதவிகளை ஐ.நா. செய்து வருகிறது. உக்ரைன் எல்லையில் ஏராளமான மக்கள் குடும்பத்துடன் காத்துக் கிடக்கிறார்கள். அவர்களுக்கு அதிக உதவி தேவைப்படுகிறது. அவர்கள் நம்பிக்கையற்று காணப்படுகிறார்கள்.

ரஷ்யா தனது தாக்குதலை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று உலக நாடுகள் வலியுறுத்தி வருகின்றன. சமாதானத்தை ஏற்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் ஐ.நா. மேற்கொண்டு வருகிறது என்று தெரிவித்தார்.

## ஆப்கானில் ஆண்கள் தாடியில்லாமல் அலுவலகத்துக்கு செல்லக்கூடாது

### தலிபான் அரசு உத்தரவு

ஆப்கானிஸ்தானில் அரசுத்துறையில் பணிபுரியும் ஆண்கள், முகத்தில் தாடி இல்லாமல் அலுவலத்துக்கு செல்லக் கூடாது என்று தலிபான் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் அதிபர் அஷ்ரஃப் கனி தலைமையிலான அரசை கவிழ்த்து தலிபான்கள் ஆட்சியை பிடித்தனர். அன்றுமுதல் ஆப்கானிஸ்தானில் பழங்கால ஷரியத் முறையை தலிபான்கள் அமுல்படுத்தி வருகின்றனர்.

குறிப்பாக, பெண்கள் கல்வி நிலையங்கள் செல்லவும், வேலைக்கு செல்லவும் தடை விதிக்கப்பட்டது. பெண்கள் வெளியே எங்கு சென்றாலும் கட்டாயம் புர்கா அணிய வேண்டும் உள்ளிட்ட உத்தரவுகளை தலிபான்கள் பிறப்பித்தனர். இதற்கு எதிராக அந்நாட்டில் பெண்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஆனால், அவற்றுக்கு தலிபான்கள் செவிசாய்க்கவில்லை.

இந்நிலையில், ஆப்கானிஸ்தானில் அரசுத்துறைகளில் பணிபுரியும் ஆண்கள், தாடி இல்லாமல் அலுவலகத்துக்கு செல்ல அந்நாட்டு அரசு தடை விதித்துள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை முதல் இந்த உத்தரவு நடைமுறைக்கு வந்துள்ளது.

அதன்படி, அரசு அலுவலகங்களுக்கு செல்லும் ஆண்கள் கட்டாயம் தாடி வைத்திருக்க வேண்டும்; அலுவலகங்களில் உரிய நேரங்களில் கட்டாயம் தொழுகை செய்ய வேண்டும். மேற்கத்தேய உடைகளை அணியக் கூடாது ஆப்கானிஸ்தானின் பழங்கால உடைகளையே அணிய வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை மீறுபவர்கள் பணி நீக்கம் செய்யப்படுவார்கள் என்றும் ஆப்கானிஸ்தான் அரசு எச்சரித்துள்ளது.



## புதிய பாதையில் பயணம்

கொலம்பியாவைச் சேர்ந்த அமெரிக்க நடிகையான சோபியா வெகாரா, விருதுகளை நோக்கியல்லாது மக்களின் மனதில் இடம்பிடிப்பதற்கான காதாபாத்திரங்களை தெரிவுசெய்து நடிக்கவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இன்ஸ்டாகிராமில் 24.8 மில்லியன் பயனர்களைக் கொண்டுள்ள சோபியா, கடந்த வெள்ளிக்கிழமை இன்ஸ்டாகிராமில் புகைப்படமொன்றை பதிவிட்டார். அந்தப் படம் அவரது ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது.

அது குறித்து ஊடகமொன்றுக்கு கருத்துவெளியிடும்போதே, தான் இனி புதிய பாதையில் பயணிக்கவுள்ளதாக தெரிவித்துள்ளார். அமெரிக்காவின் புகழ்பெற்ற நடிகையான சோபியா, தொலைக்காட்சி நிகழ்ச்சித் தொகுப்பாளராகவும் விளங்குகிறார். அவரது கவர்ச்சிப் படங்கள் குறித்து அடிக்கடி சர்ச்சையாகப் பேசப்படுவது வழமையாகும்.

## பிரேசிலில் அடைமழை: எண்மர் உயிரிழப்பு

### சீரற்ற காலநிலை தொடரும் எனத் தகவல்



பிரேசிலில் தொடர்ச்சியாக பெய்துவரும் அடைமழை மற்றும் வெள்ளப்பெருக்கில் சிக்கி எண்மர் உயிரிழந்துள்ளதுடன் 13 பேர் காணாமல்போயுள்ளனர்.

அந்நாட்டின் பல பகுதிகளிலும் கடும் மழை பெய்துவருவதுடன் கடந்த இரு நாட்களாக மிக மோசமான காலநிலை நிலவுகிறது. ஓரிரு பகுதிகளில் சூறாவளி வீசியதாகவும் வீடுகள் பல சேதமடைந்துள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஏற்கனவே கடந்த ஒன்றரை மாதங்களுக்கு முன்னர் நிலவிய சீரற்ற காலநிலையால், வெள்ளத்தில் சிக்குண்டு பெட்ரோபொலிஸ் மாநிலத்தில் 233 பேர் பலியானார்கள். அதன் பின்னர் இப்போது கடும் மழை பெய்துவருகிறது.

போன்டா நேக்ரா என்ற இடத்தில் வீடொன்றின் மீது மண்மேடு சரிந்ததில் தாயும் அவரது ஐந்து பிள்ளைகளும் உயிரிழந்துள்ளார்கள். பிள்ளைகள் அனைவரும் 15 வயதுக்குக் கீழ்பட்ட சிறுவர்கள் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## உலக செய்திகள்


## ஆபத்து!



காலநிலை மாற்றம் காரணமாக பிரித்தானியாவில் வண்ணத்துப்பூச்சிகள் பெரும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரித்தானியாவின் பல்வேறு பகுதிகளிலும் அதிக வெப்பம் நிலவிவருகிறது. இது உயிரினங்களில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்துமென ஸ்டொக்ஹோம் பல்கலைக்கழகத்தின் ஆய்வாளர்கள் ஆராய்ச்சிகளை மேற்கொண்டனர். அதனடிப்படையில் ஏனைய உயிரினங்களை விட வண்ணத்துப் பூச்சிகள் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளதாக ஆய்வுகளிலிருந்து தெரியவந்துள்ளது.

குறிப்பாக வண்ணத்துப்பூச்சிகள் அதிக வெப்பத்தை தாங்கிக்கொள்ள முடியாமல் உடல் எடை குறைவடைகின்றன என்றும் இதன் காரணமாக இனப்பெருக்கமும் பாதிப்படைவதாகவும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.



உக்ரைனில் ரஷ்யப் படைகள் நடத்திய தாக்குதலில் தேவாலயம் ஒன்று சேதமாகியுள்ளது.

## மியான்மர் இராணுவ ஆட்சிக்கு சீனா ஆதரவு

மியான்மரில் நடக்கும் இராணுவ ஆட்சியை ஆதரிப்போம் என சீனா தெரிவித்துள்ளது.

தென்கிழக்கு ஆசிய நாடான மியான்மரில், இராணுவ ஆட்சி நடக்கிறது. அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் வுன்னா மவுங் லிவின், சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி உடன் தொலைபேசியில் உரையாடியுள்ளார்.

அண்டை நாடுகளிடம் நட்புறவுடன் இருக்கவே, சீனா விரும்புகிறது. மியான்மரில் எந்த சூழ்நிலை இருந்தாலும், இராணுவ ஆட்சிக்கு முழுமையாக ஆதரவு தருவோம். சுதந்திரமான வெளியுறவு கொள்கையை, சீனா பின்பற்றுகிறது. சீனா - மியான்மர் பொருளாதார பாதை அமைக்கும் திட்டம் விரைவுபடுத்தப்படும் என சீன வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.



ஜப்பானின் டோக்கியோ நகரில் இடம்பெற்ற வளர்ப்பு நாய்களுக்கான கண்காட்சியின்போது அலங்காரங்களுடன் காட்சியளிக்கும் நாய்கள்.

# முன்னாள் ஆயர் அமரர் இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் முதலாம் ஆண்டு நினைவுப் பேருரை









*(மன்னார் நகர் நிருபர்)*

மன்னார் மறைமாவட்ட முன்னாள் ஆயர் அமரர் இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் முதலாம் ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு ஆண்டகையின் நினைவுப் பேருரை தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை (02) மாலை 03 மணியளவில் மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் விருந்தினர்களாக மட்டக்களப்பு திருமலை ஓய்வுநிலை ஆயர் பேரருட் கலாநிதி கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை, யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி ப.யோ.ஜெபரட்ணம் அடிகளார், மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட்தந்தை எஸ்.ஜெயபாலன் குரூஸ் அடிகளார், யாழ். பல்கலைக்கழக அரசறிவியல்துறை பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டதோடு, அருட்தந்தையர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது மறைந்த மன்னார் மறைமாவட்டத்தின் முன்னாள் ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து மறைந்த மன்னார் மறைமாவட்டத்தின் முன்னாள் ஆயர் இராயப்பு ஜோசேப்பு ஆண்டகையின் முதலாம் ஆண்டு நினைவுப் பேருரை நூலை ஓய்வுநிலை ஆயர் பேரருட் கலாநிதி கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து நினைவுப் பேருரைகள் இடம்பெற்றன.

நினைவுப் பேருரையினை மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட்தந்தை எஸ்.ஜெயபாலன் குரூஸ் அடிகளார், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், யாழ். பல்கலைக்கழக அரசறிவியல்துறை பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம், தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் நிகழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

# பனைசார் உற்பத்தியாளர்களுக்கு உதவித்திட்டம் வழங்கும் நிகழ்வு யாழில்




*(யாழ். நிருபர்)*

பனைசார் உற்பத்தியாளர்களுக்கு உதவித்திட்டம் வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் - நாவற்குழியில் அமைந்துள்ள பனை ஆராய்ச்சி நிலையத்தில் இடம்பெற்றது.

தென்னை, கித்துள் மற்றும் பனைச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் ஏற்பாட்டில் பனை அபிவிருத்தி சபையினால் தொழிலாளர்களை மேம்படுத்துவதற்கான தேசிய வேலைத்திட்டம் யாழ்ப்பாணத்தில் கடந்த வியாழக்கிழமை மாலை ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இதன் ஓர் கட்டமாக பனைசார்ந்த உற்பத்திப் பொருட்களை மேற்கொள்பவர்களுக்கு 200 மில்லியன் ரூபா செலவில் உதவிகள் வழங்கப்படவுள்ளதுடன், சம்பிரதாயபூர்வமாக குறித்த உதவிகள் சிலருக்கு வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் பெருந்தோட்ட அமைச்சர் ரமேஷ் பத்திரண, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தென்னை கித்துள் மற்றும் பனை செய்கை மேம்பாடு இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோ, பனை அபிவிருத்தி சபையின் தலைவர் கிரிஷாந்த பத்திராஜா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் சிறீசற்குணராஜா, வடமாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ஜகத் பளிகக்கார, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் உள்ளிட்ட பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.



# வவுனியா ஏ9 வீதியில் வேன் - முச்சக்கரவண்டி மோதி விபத்து: கனடா நாட்டு பிரஜை உட்பட இருவர் படுகாயம்

*(வவுனியா நிருபர்)*

வவுனியா ஏ9 வீதி கொக்குவெளி இராணுவ முகாம் அருகே நேற்று முன்தினம் (02) காலை 9.30 மணியளவில் வேன் - முச்சக்கரவண்டி மோதுண்டு விபத்துக்குள்ளானதில் கனடா நாட்டு பிரஜை உட்பட இருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவிலிருந்து கொழும்பு நோக்கி சென்ற வேன் ஏ9 வீதி கொக்குவெளி இராணுவ முகாம் அருகே ஒரு வாகனத்தினை முந்திச்செல்ல முற்பட்ட சமயத்தில் வாகனம் சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து எதிர்த்திசையில் வவுனியா நகரிலிருந்து நொச்சிமோட்டை நோக்கி பயணித்த முச்சக்கரவண்டியுடன் நேருக்கு நேர் மோதுண்டு இரு வாகனங்களும் தடம்புரண்டு விபத்துக்குள்ளாகின.




இவ்விபத்தில் முச்சக்கரவண்டி சாரதியான 43 வயதுடைய குடும்பஸ்தர் மற்றும் முச்சக்கரவண்டியில் பயணித்த கனடா நாட்டு பிரஜையான 55 வயதுடைய நபர் ஆகிய இருவரும் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன், மேலதிக சிகிச்சைக்காக முச்சக்கரவண்டி சாரதி திடீர் அவசர சிகிச்சை பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த வவுனியா போக்குவரத்து பொலிஸார் விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன், ஹயர்ஸ் ரக வாகனத்தின் சாரதியினை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

















**கண்டி மலையக கலை, கலாசார (இரத்தின தீபம்) சங்கத்தின் ஏற்பாட்டில் மறைந்த சிங்களத் திரைப்பட நடிகர் காமினி பொன்சேகா, இந்தியத் திரைப்பட பாடகி லதா மங்கேஷ்கர், அறிஞர் அருள்வாக்கி அப்துல் காதர் ஆகியோர்களுக்கான 'நீங்காத நினைவுகள்' நிகழ்வு கண்டி கெப்பிட்டிப்பொல ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது.**

**பேராசிரியர் துரை.மனோகரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் களனி பல்கலைக்கழக அரசியல்துறை தலைவர் ரோஹண லக்ஷ்மன் பியதாச பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினராக சமூக தொண்டர் லக்கி லேண்ட் எஸ்.முத்தையா ஆகியோரும் கலந்துகொண்டனர்.**

**அறிமுக உரையை கண்டி இந்து சிரேஷ்ட கல்லூரி அதிபர் பெ. சிவக்குமாரும், நன்றி உரையை கண்டி இராமனும் நிகழ்த்தினர்.**

**(கண்டி இரா.அ.இராமன்)**




# பிபா உலகக்கிண்ணத் தொடருக்கான போட்டி அட்டவணை வெளியானது



32 அணிகள் பங்கேற்கும் 22ஆவது பிபா உலகக்கிண்ண உதைபந்து தொடர் நவம்பர் 21ஆம் திகதி கட்டாரில் ஆரம்பமாகும் நிலையில் அதற்கான உத்தியோகபூர்வ போட்டி அட்டவணை வெளியானது.

முதல் நாளில் 4 லீக் ஆட்டங்கள் நடைபெறுகின்றன. ஏ பிரிவில் அங்கம் வகிக்கும் செனகல் - நெதர்லாந்து, கட்டார் - ஈகுவாடர், பி பிரிவில் இடம்பெற்றுள்ள முன்னாள் சம்பியன் இங்கிலாந்து - ஈரான், அமெரிக்கா - யூரோ தகுதி சுற்று அணி ஆகிய அணிகள் மோதுகின்றன.

நம்பர் ஒன் அணியும் 5 முறை உலக சம்பியனுமான பிரேஸில் தனது முதல் ஆட்டத்தில் செர்பியாவை நவம்பர் 24ஆம் திகதியும் அர்ஜென்டினா அணி சவூதி அரேபியாவை நவம்பர் 22ஆம் திகதியும் முன்னாள் சம்பியன் ஜேர்மனி, ஜப்பானை நவம்பர் 23ஆம் திகதியும் எதிர்கொள்கிறது.

## விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# இரண்டாவது ஐ.பி.எல். சதம் விளாசிய பட்லர்!

நடப்பு ஐ.பி.எல். தொடரின் 9ஆவது லீக் போட்டியில் நேற்று முன்தினம் மாலை ஐந்து முறை சம்பியனான மும்பை இந்தியன்ஸ் மற்றும் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிகள் மோதின. குறித்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி 20 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 193 ஓட்டங்கள் குவித்தது. 194 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய மும்பை அணி 20 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 170 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து 23 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஜோஸ் பட்லர், மும்பை அணியின் பந்துவீச்சை வெளுத்து வாங்கினார். 68 பந்துகளில் 100 ஓட்டங்கள் விளாசினார். ஐ.பி.எல்இ தொடரில் அவரின் இரண்டாவது சதமாக இது அமைந்தது. அது மாத்திரமல்லாமல் 2022 ஐ.பி.எல். தொடரில் பதிவுசெய்யப்பட்ட முதல் சதமாகவும் இது அமைந்தது.



RR vs MI
போட்டியை காண

# பாடசாலை மட்ட உதைபந்தாட்ட தரவரிசையில் களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி முன்னிலையில்

(பீ.எம் முக்தார்)

கொழும்பு ரேஸ் கோஸ் மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற ஜனாதிபதி கிண்ண உதைபந்தாட்ட இறுதிப்போட்டிக்கு தெரிவுசெய்யப்பட்ட களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) போட்டித் தொடரில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

தொடரின் சிறந்த கோல் காப்பாளருக்கான விருதை களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி மாணவன் அஹமட் நிபால் பெற்றுக்கொண்டார்.



இந்த சர்வதேச மைதானத்தில் அஹமட் நிபால் தனதாக்கிக்கொண்ட இரண்டாவது சிறந்த கோல் காப்பாளருக்கான விருது இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை பாடசாலை மட்ட உதைபந்தாட்ட வரலாற்றில் தனக்கென தனியிடம் பிடித்துள்ள களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரியை (தேசிய பாடசாலை) கல்லூரியின் பழைய மாணவர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு உட்பட கல்லூரியின் ஆசிரியர்களும் பாராட்டுவதில் பெருமிதம் கொள்கின்றனர்.






# பாபரின் அபார சதத்தின் மூலம் ஒருநாள் தொடர் பாக். வசம்

ஆஸி. அணியுடனான 3 போட்டிகள்கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரை பாகிஸ்தான் அணி 2-1 என்ற அடிப்படையில் கைப்பற்றியது.

குறித்த தொடரின் முதலிரண்டு போட்டிகளில் இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றிபெற்றதால் 1-1 என தொடர் சமனடைந்தது. தொடரின் முடிவை தீர்மானிக்கும் கடைசி ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் லாஹூரில் நடந்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸி. அணி 41.5 ஓவர்களில் வெறும் 210 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

இதையடுத்து 211 ஓட்டங்கள் என்ற எளிய இலக்கை விரட்டிய பாகிஸ்தான் அணிக்கு இமாம் உல் ஹக்கும், பாபர் அஸாமும் இணைந்து அபாரமாக துடுப்பெடுத்தாடினர். பாபர் அஸாம் அபாரமாக ஆடி சதமடித்தார். பாபர் அஸாம் 105 ஓட்டங்களும், இமாம் உல் ஹக் 89 ஓட்டங்களும் அடிக்க, 38வது ஓவரிலேயே 211 ஓட்டங்கள் என்ற இலக்கை எட்டி பாகிஸ்தான் அணி 9 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது. டெஸ்ட் தொடரை இழந்த பாகிஸ்தான் அணிக்கு 2-1 என்ற அடிப்படையில் ஒருநாள் தொடர் கிடைத்தது.




# ஒலுவில் அல்-ஹம்றா மகா வித்தியாலய சுப்பர் கிங் ஆசிரியர்கள் அணிக்கு வெற்றி



(எஸ். அஷ்ரப்கான்)

ஒலுவில் அல்-ஹம்றா சுப்பர் கிங் ஆசிரியர்கள் அணிக்கும், ஹம்றா பிர்லியன் போய்ஸ் மாணவர்கள் அணிக்கும் இடையிலான சிநேகபூர்வ மென்பந்து கிரிக்கெட் போட்டி அண்மையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது.

இப்போட்டியில் அல்-ஹம்றா மகா வித்தியாலய ஹம்றா சுப்பர் கிங் ஆசிரியர்கள் அணி 3 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது. நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற ஹம்றா சுப்பர் கிங் ஆசிரியர்கள் அணி முதலில் துடுப்பெடுத்தாடி 4 விக்கெட் இழப்பிற்கு 110 ஓட்டங்களை பெற்றனர்.

111 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஹம்றா பிர்லியன் போய்ஸ் மாணவர்கள் அணி 8 ஓவர்கள் முடிவில் 108 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டனர். இதனடிப்படையில் 3 ஓட்டங்களால் ஹம்றா சுப்பர் கிங் ஆசிரியர்கள் அணி வெற்றிபெற்றது.

இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக ஹம்றா சுப்பர் கிங் ஆசிரியர்கள் அணியின் ஆசிரியர் முஹம்மட் றிஸாட் (55 ஓட்டங்கள்) தெரிவானார். மிகவும் சுவாரஸ்யமாக அமைந்த இந்தப் போட்டி, இறுதிக்கட்டம்வரை மிகவும் விறுவிறுப்பாக அமைந்தது. ஹம்றா பிர்லியன்போய்ஸ் மாணவர்கள் அணி இறுதி ஓவரில் ஒரு பந்துக்கு 4 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் துடுப்பெடுத்தாடி தோல்வியை தழுவிக்கொண்டது.



இங்கு அதிதியாக கலந்துகொண்ட பாடசாலையின் உதவி அதிபர் எம்.எச்.மஹ்மூத் நஸீம் வெற்றிபெற்ற ஹம்றா சுப்பர் கிங் ஆசிரியர்கள் அணித்தலைவர் ஆசிரியர் ஆர். நௌஸாட் உள்ளிட்ட வெற்றி அணியிடம் கேடயத்தினை வழங்கி கௌரவித்தார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7